**Mierra** Gems & Jewellery



லண்டனில் பொற்கை வண்ணர்களின் நிர்வாகத்தில் இயக்கும் ஒரே நகை மாடம்

மீரா ஜுவல்லரி மார்ட்

34, London Road, Tooting, London SW17 9HP

Tel : 020 8648 7750 / 07958 948 685



A freely Circulated fortnightly

# புதினம்

PUTHINAM



HOMOEO CARE

லண்டனில் இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

டாக்டர். தியாகராஜன்

Tel: 020 8767 8004, 07833 341 693 • 020 8144 1553



மலர் : 15 • 16-30 நவம்பர், 2010 | 15 ஆண்டுகளாக லண்டனில் தொடர்ந்து மாதமிருமுறை வெளிவரும் ஒரே தமிழ் இதழ் | இதழ் : 18



MITHUS JEWELLERS

லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகை மாளிகை

322 London Road, Croydon CRO 2TJ, 020 8683 1756

22 காரட் தங்க, வைர நகைகளுக்கு நம்பிக்கையான இடம்




# கேள்வியின் நாயகி

## சிங்களத்தின் ஆணைக்குழு நாடக மேடையில் விசுவாசத்தை வெளிப்படுத்தும் யாழ். அரச அதிபர்

அரச அதிபர் ஒருவர், அரசிற்கு விசுவாசமாக இருப்பார் என்பதை சொல்லி விளக்க வேண்டிய அவசியமில்லை. முன்பு முல்லைத்தீவு அரச அதிபராக இருந்த திருமதி. இமெல்டா சுகுமார், தற்போது சிங்களக் குடியேற்றம் தீவிரமாக நடைபெறும் யாழ். மாவட்டத்தின் அரசாங்க அதிபர்.

சிங்களம் உருவாக்கியுள்ள நல்லிணக்க ஆணைக்குழு நாடக மேடையில், தனது பேரினவாத அரச விசுவாசத்தை, மிகத் தாராளமாகவே வெளிப்படுத்தியுள்ளார் இந்த அம்மையார். சரணடைந்த பொதுமக்களை, இராணுவம் ஒருபோதும் சுட்டுக் கொல்லவில்லை என்று தான் கேள்விப்பட்டதை அடித்துக் கூறியுள்ளார்.

இவர் இந்த ஆணைக்குழு முன்பாக கூறிய விடயங்களெல்லாம், அவர் கேள்விப்பட்ட விடயங்களாக இருப்பதைக் காணலாம்.

பதவி சுகத்தில், மனிதாபிமானங்களும் மரணித்து விடும் என்பதற்கு இமெல்டா சுகுமார் நல்ல சான்று.

போரை நிறுத்துமாறு உலகத் தமிழர்கள் கதறினார்கள். உமிக்குவியலில் அரிசி பொறுக்கும் அவல வாழ்வினை மாற்ற, உணவை அனுப்ப அனுமதிக்குமாறு உலக மனித உரிமை அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்தன.

பாதுகாப்பு வலயங்களுக்கு வரச் சொல்லி, அங்கு விமானத் தாக்குதலை நடாத்தியதன் மூலம் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதை, இமெல்டா மறைத்தாலும், வெளிநாட்டுப் பத்திரிகைகள் சற்றலைட் புகைப்படங்கள் மூலம் நிரூபித்தன.

வன்னியில், இந்த நல்லிணக்க ஆணைக்குழு


தொடர்ச்சி 12ம் பக்கம்



Non Vegetarian DOSA LOUNGE Pure Vegetarian

குறொய்டனில் ஒரு வித்தியாசமான உணவகம்

மாமிச உணவு — தனிக்குசினி - சாப்பிட தனிப்பகுதி

அசல் சைவஉணவு — தனிக்குசினி - சாப்பிட தனிப்பகுதி

Restaurant & TAKE AWAY

உங்கள் வைபவங்களைக் கொண்டாட பெரிய, சிறிய HALL வசதி

5 - 7 St. James Road, Croydon CRO2SB

Tel: 020 8684 6661

IRO Immigration - குடிவரவு

OISC

கடந்த 15 ஆண்டுகளாக பிரித்தானியாவில் குடிவரவுத்துறையில் முன்னணி நிறுவனம்

உங்கள் சகலவிதமான குடிவரவு விண்ணப்பங்கள் - மேன்முறையீடுகள் (Appeals) இலங்கை, இந்தியாவில் விசா மறுக்கப்பட்டவர்களுக்கான மேன்முறையீடுகள் - நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள். இது தவிர Human Rights - Humanitarian Protection, 10 Years - 14 Years விண்ணப்பங்கள், புதிய அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் (Fresh Application)

முன் அனுமதி பெற்று வரவும். (அலுவலக நேரம்: 11.00 - 17.30 திங்கள் முதல் வெள்ளி)

விபரங்கட்கு : திரு. குலேந்திரன்

1083 Garratt Lane, London SW17 OLN - Tel: 020 8682 4494 Mob: 07769 185 592

குடிவரவு ஆணையாளர் அலுவலகத்தினால் குடிவரவு ஆலோசனைகள் வழங்க Level 3அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்



தீபம் தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல் - 9ம் பக்கம் பார்க்க



aa accounting & business solutions associates

CHARTERED MANAGEMENT ACCOUNTANTS MANAGEMENT AND BUSINESS CONSULTANTS

For Efficient and Quality Professional Accounting Services



Also through our contacts, we are able to raise Finance for Business.

265, Haydons Road, London SW19 8TY
info@aa-accounts.co.uk
www.aa-accounts.co.uk
020 8545 0205
07786 966207 (Sashi)
07747 794 358 (Uthayanan)

We specialise in:
- Year and accounts preparation
- Management accounts
- Solicitors accounts
- Book keeping
- Self Assessment and tax returns
- VAT and TAX investigations
- Payroll preparations
- Business Start up advice
- Business plans and cash flow forecasts
- Management consultancy

லண்டனில் No.1 தங்க நகை மாளிகை

இலண்டனில் தரமான தங்கத்திற்கு... LAKSHMIS Jewellers



276, High Street North, London E12 6SA, UK

Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடு கடந்த அரசு அமைச்சரவை மூன்று துணைப் பிரதமர்கள்

நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணி விஸ்வநாதன் உருத்திரகுமாரன், தனக்கான அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்துள்ளார். மூன்று துணைப் பிரதமர்கள், ஏழு அமைச்சர்கள், 10 துணை அமைச்சர்கள் பெயர்களை வெளியிட்டுள்ளார்.

**பிரதமர்**

விஸ்வநாதன் உருத்திரகுமாரன்

**துணை பிரதமர்கள்**

- பேராசிரியர் செல்வா செல்வநாதன் - நிதி அமைச்சர்
- உருத்திராபதி சேகர் - மாவீரர்கள், போராளிகள் குடும்ப நலன் பேணல் அமைச்சர்
- கலாநிதி ராம சிவலிங்கம் - கல்வி, பண்பாடு, உடல் நலத்துறை அமைச்சர்

**ஏனைய அமைச்சரவை உறுப்பினர்கள்:**

- திரு நாகலிங்கம் பாலச்சந்திரன் - உள்ளக விவகார அமைச்சர்.
- திரு சாம் சங்கரசிவம் - தகவல்துறை அமைச்சர்.
- திரு தணிகாசலம் தயாபரன் - அரசியல் அனைத்துலக விவகார அமைச்சர்.
- திருமதி பாலாம்பிகை முருகதாஸ்- பெண்கள், சிறுவர், மூத்தோர் நலன் பேணல் அமைச்சர்.
- திருமதி கற்பனா நாகேந்திரா - பொருண்மிய விவகாரங்கள்; சூழல் அபிவிருத்திக்கான அமைச்சர்.
- திரு டிலக்சன் மொறிஸ் - இனஒழிப்பு, போர்க்குற்றங்கள் குற்றவிசாரணைக்கும் தடுப்புக்குமான அமைச்சர்.
- திரு முத்துக்குமாரசுவாமி இரத்னா - போர்க்கைதிகள்; இடம் பெயர்ந்தோர், ஏதிலிகள் விவகார அமைச்சர்.

**துணை அமைச்சர்கள்:**

- திரு நடராஜா இராஜேந்திரா - துணை நிதி அமைச்சர்
- திருமதி சுபா சுந்தரலிங்கம் - மாவீரர்கள், போராளிகள் குடும்ப நலன் பேணல் துணை அமைச்சர்
- திரு இராஜரட்ணம் ஜெயச்சந்திரன் - கல்வி, பண்பாடு, உடல்நலத்துறை துணை அமைச்சர்
- திரு சமுகன் சோதிநாதன் - உள்ளக விவகார அமைச்சர்
- திரு சிவகுருநாதன் சுதர்சன் - தகவல்துறை துணை அமைச்சர்
- திரு கனகேந்திரம் மாணிக்கவாசகர் - அரசியல் அனைத்துலக விவகார துணை அமைச்சர்
- திருமதி ரஜனி சின்னத்தம்பி - பெண்கள், சிறுவர், மூத்தோர் நலன் பேணல் துணை அமைச்சர்
- கலாநிதி தவேந்திர ராஜா - பொருண்மிய விவகாரங்கள், சூழல் அபிவிருத்திக்கான துணை அமைச்சர்
- திருமதி தாட்சாயினி தவராஜசிங்கம் - இனஒழிப்பு, போர்க்குற்றங்கள், குற்றவிசாரணைக்கும் தடுப்புக்குமான துணை அமைச்சர்
- திரு டொஸ் அலக்ஸ் - போர்க்கைதிகள், இடம் பெயர்ந்தோர், ஏதிலிகள் விவகார துணை அமைச்சர்



## கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம்

'கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம்' லண்டனில் கடந்த 7ம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. sudbury, ஹரோ றோட்டில் உள்ள st.george church இல் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தாய்ச் சங்கத்தின் தலைவர் எஸ்.பொன்னம்பலம் இதனை ஆரம்பித்து வைத்தார். இவர் தலைவர், பொருளாளர், செயலாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தார்.

தலைவர்: சி.கிருஷ்ணமூர்த்தி, செயலாளர்: வி.மகாலிங்க சிவம், பொருளாளர்: எஸ்.பாலசுந்தரம்.

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் வருமாறு:

உப தலைவர்: எம்.சிவபாதசுந்தரம், உப செயலாளர்:ஏ.என்.சிவராஜா.

தெரிவான நிர்வாக சபை: ஈ.தேவராஜா, ஜெயசோதி ஜெயானந்தன், எஸ்.யோகநாதன், ராணி பொன்னுத்துரை, கே.நடராஜா, ரி.அருள் நந்தி, எம்.நற்குணதயாளன்.


விரைவில் வெளிவர இருக்கிறது...

தமிழன்

தரணியெங்கும் தமிழ்

பத்திரிகையாளனின் அனுபவ முத்திரை பளிச்சிட

உலகத் தமிழருக்காக லண்டனிலிருந்து ஒரு தமிழ் சஞ்சிகை



**வயதான தாயாரை பார்க்க பொறுப்பான பெண் தேவை...**

வயதான தாயாரை காலை 8 மணி முதல் மாலை 05.30 மணி வரை பார்ப்பதற்கு பாசமும், பொறுப்புமுள்ள பெண்மணி ஒருவர் தேவை. BHLHAM பகுதியிலிருந்து ஐந்து மைல் சுற்றளவில் வசிப்பவராக இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு

**077 353 468 90**



**லண்டன் உணவகத்துக்கு CHEF தேவை**

லண்டன் LEWISHAMஇல், சிவன் கோவிலுக்குச் சமீபமாக உள்ள உணவகம் ஒன்றுக்கு SOUTH INDIAN AND SRILANKAN உணவுகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள CHEF ஒருவர் தேவை.

தொடர்புக்கு

**020 8297 6452**



# புதினம்

PUTHINAM

மாதமிருமுறை இலவச இதழ்

ஆசிரியர்: ஈ.கே.ராஜகோபால்

அலுவலக முகவரி

**PUTHINAM**

38, Moffat Road, London SW17 7EZ

Tel: 020 8767 8004

Mob: 07735 346 890

E-Mail : editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 15 ஆண்டுகளாக தொடர்ந்து லண்டனில் மாதமிருமுறை வெளிவரும் ஒரே இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான £ 12.00 பவுண்டுகளை மட்டும் EELAKESARI என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



**லண்டனில் மீண்டும் தமிழக ஜோதிடர்**

பிரபல தமிழக ஜோதிடர் பீஷ்மர் சித்தர் திருச்சி தில்லை நடராஜர் என்கின்ற

**தில்லை ரெங்கராஜர்**

உங்களுடைய பிறந்த திகதியைக் கொண்டு ஐந்து நிமிடத்தில் குறிப்பு எழுதி கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம், படிப்பு, தொழில், திருமணம், அதிர்ஷ்டம் போன்றவற்றைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்கிறார்.

**நியூமோல்டன் முருகன் கோயிலில்**

(255 Burlington Road, Newmalden kT34NE)

**Mob: 07960 734 968**



**Vasuki Solicitors**

எல்லா சட்ட ஆலோசனைக்கும்...

Asylum, Fresh Application, Deportation

**Vasuki Muruhathas**

10 Shakespeare Crescent, Manor Park, London E12 6 LN

Tel: 0208 470 6655 Mob: 07816 364 753


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தடுமாறும் மகிந்தா!

## நீதி கிடைக்கும் வரை ஓயப்போவதில்லை என்கிறது பிரித்தானிய தமிழர் பேரவை

பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த சிறீலங்கா அரச தலைவர் மகிந்தா ராஜபக்சாவை சிறீலங்காவில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் கைது செய்வதற்கான நடவடிக்கையை புலம்பெயர் தமிழ் சமூகம் மேற்கொண்டதைத் தொடர்ந்தே அவர் தனது பயணத்தை கைவிட்டுள்ளதாக பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் 'த இன்டிப்பெண்டன்ட்' நாளேடு தெரிவித்துள்ளது.

**இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது:**

மகிந்தா பிரித்தானியா வரும்போது அவரை கைது செய்வதற்கு தாம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக புலம்பெயர் தமிழ் சமூகம் விடுத்த அச்சுறுத்தலை தொடர்ந்தே சிறீலங்கா அரச தலைவர் தனது பயணத்தை கைவிட்டுள்ளார்.

பிரித்தானியாவில் உள்ள ஒக்ஸ்போர்ட் சபையில் பேசுவதற்கும் மகிந்தா திட்டமிட்டிருந்தார். ஆனால் எல்லாம் மிகவும் குறுகிய நேர அறிவிப்புடன் கைவிடப்பட்டுள்ளது. அனைத்துலக சட்டத்தின் பிரகாரம் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்காக குற்றம் செய்தவரை பிரித்தானியாவில் வைத்து கைது செய்ய முடியும்.

ஆனால் மகிந்தா வேறு பணிகளில் கவனம் செலுத்தி வருவதால் பிரித்தானியா பயணத்திற்கான காலம் மாற்றப்பட்டுள்ளதாக சிறீலங்கா அரசு தெரிவித்து வருகின்றது. பிரித்தானியாவின் இந்த சட்டமூலம் மாற்றப்பட வேண்டும் என சில நாடுகள் கருத்து தெரிவித்து வருகின்றன.

பிரித்தானியா செல்லும்போது தான் கைது செய்யப்படலாம் என்று அஞ்சியதால் இஸ்ரேல் அமைச்சர் டான் மெரிடோர் தனது பயணத்தை அண்மையில் கைவிட்டிருந்தார். அதன் பின்னர் . பிரித்தானியா வெளிவிவகார அமைச்சரிடம் கருத்து தெரிவித்துள்ள இஸ்ரேல், பிரித்தானியாவுடன் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுக்களை தாம் அதனால் கைவிட நேர்ந்ததாக தெரிவித்திருந்தது.

சிலி நாட்டைச் சேர்ந்த சர்வாதிகாரி ஒகஸ்ரோர் பினோசற் பிரித்தானியாவுக்கு வருகை தந்தபோது கடந்த 1998 ஆம் ஆண்டு ஸ்கொட்லாண்ட்யாட் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தார். இராணுவ அரசு ஆட்சியில் இருந்தபோது அவர் துன்புறுத்தல்கள், படுகொலைகள் என்பவற்றில் ஈடுபட்டிருந்தார்.

எனினும் நீண்ட காலம் இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணைகளின் போது, கொன்சவேட்டிவ் கட்சியின் அமைச்சர் ஒருவரின் தலைமையில் பினோசற்றுக்கு ஆதரவாக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களை தொடர்ந்து, உடல்நிலையை காரணமாகக் காட்டி பிரித்தானியா அரசு அவரை விடுதலை செய்திருந்தது.

ஆனால் தற்போதைய சட்டத்தின் பிரகாரம், போர்க்குற்றங்களில் ஈடுபட்டவரை கைது செய்வதற்கான கைது அனுமதியை தனிநபரோ அல்லது மனிதாபிமான அமைப்புக்களோ பிரித்தானியாவின் நீதி மன்றத்தில் பெறுவது சுலபமானது.

எனினும் தற்போது பிரித்தானியா அரசு முன்வைத்துள்ள மாற்றங்களில், இந்த சம்பவத்தில் பொது நீதிமன்றத்தின் பணிப்பாளர் உள்ளடக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சட்டத்தின் பிரகாரம் நாட்டின் தலைவர்கள் கூட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தால் தண்டிக்கப்பட முடியும். எனினும் தனிப்பட்ட பயணம், உத்தியோகபூர்வ பயணம் தொடர்பில் சட்டம் தெளிவற்றதாகவே உள்ளது.

தான் விமானத்தை விட்டு இறங்கினால் கைது செய்யப்படலாம், அதற்கான கைது உத்தரவை பலஸ்த்தீன் ஆர்ப்பாட்டக்காரர்கள் பெற்றுவிடுவார்கள் என்பதற்காக இஸ்ரேலிய ஜெனரல் ஒருவர் ஹீத்றூ விமானநிலையத்தில் விமானத்திலேயே தங்கியிருந்த சம்பவமும் உண்டு. இதனால் 2005ம் ஆண்டு பிரித்தானியா பிரதமர் ரொனி பிளேயர் அனுப்பிய அழைப்பை கூட நிராகரிக்குமாறு அன்றைய இஸ்ரேல் பிரதமர் ஏரியல் சரோனுக்கு தெரிவிக்கப்பட்டது.

நானும் எனது ஜெனரலைப் போலவே இராணுவத்தில் பணியாற்றியவன். நானும் ஜெனரல் தான். பிரித்தானியாவின் சிறை மிகவும் கடுமையானது. எனவே அதற்குள் செல்ல நான் விரும்பவில்லை என சரோன் தெரிவித்திருந்தார்.



சிறீலங்காவில் கடந்த வருடம் இடம்பெற்ற போர் தொடர்பில் சிறீலங்கா அரசு மீது பல குற்றச்சாட்டுக்கள் உண்டு. அங்கு 10,000 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சிறீலங்காவில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள அரசு அனுமதிக்க வேண்டும் என பிரித்தானியா பிரதமர் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவுக்கு வருகை தந்த சிறீலங்கா வெளிவிவகார அமைச்சரிடம், பிரித்தானியா வெளிவிவகாரச் செயலாளர் வில்லியம்ஹெக் கூட அதனைத் தான் தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளை . தோற்கடித்த பின்னர் இரண்டாவது தடவை அரச தலைவர் தேர்தலில் வெற்றியீட்டிய மகிந்தா அங்குள்ள அரசியல் யாப்பையும் மாற்றி அமைத்துள்ளார். அவர் மறுதடவையும் அரச தலைவர் தேர்தலில் பங்கு கொள்ளலாம். சுயாதீன விசாரணைகளையும் சிறீலங்கா அரசு தொடர்ந்து நிராகரித்து வருகின்றது.

சிறீலங்கா அரசு தனது சொந்த விசாரணைக்குழுவை அமைத்துள்ளபோதும், அதன் மீது மனித உரிமை அமைப்புக்கள் தமது விமர்சனத்தை முன்வைத்துள்ளன. ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் · நவநீதம்பிள்ளையும் அதனை விமர்சித்துள்ளார்.

சிறீலங்கா அரசு மேற்கொண்ட மனித உரிமை மீறல்களில் பலியாகிய மக்களுக்கு நீதி கிடைக்கும் வரை தாம் ஓயப்போவதில்லை என பிரித்தானியாவை தளமாகக் கொண்ட தமிழர் பேரவையின் உறுப்பினர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

மகிந்தாவும், அவரின் சகோதரர்களும், கையாட்களும் தமது எதிர்காலம் தொடர்பான கவலையுடனே தினமும் படுக்கைக்கு செல்லமுடியும். ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியை விட்டு இறங்கினாலும் இது தான் அவர்களின் கதி. தமிழில் ஒரு வார்த்தை உண்டு, அதாவது அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்று. அதனைத்தான் இங்கு கூற முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய
### நினைவெழுச்சி நாள்




**27-11-2010**
**லண்டனில்**
1 WESTERN GATEWAY
ROYAL VICTORIA DOCK
LONDAN DOCKLANDS
E 16 IXL


# RATNA & CO SOLICITORS

**169A, HIGH STEET NORTH, EAST-HAM, LONDON E6 1JB, Tel : 020 8470 8818 Fax : 020 8475 0131 Mob : 07769 748409**

**E-mail : ratnaandco@hotmail.com, Web : www.ratna.co.uk., Contact : M or K Ratnapalan**



1989 முதல் 20 வருடங்களாகத் தொடர்ந்து லண்டன் EAST-HAM இல் இயங்கி வரும் சட்ட நிறுவனம். லூயிஷியாம் நகரிலும் கிளை (225, LEWISHAM WAY, LONDON SE4 1UY) நிறுவனம் உள்ளது.

எங்களுக்கு சட்ட வல்லுனர்கள் அமைப்பினால், இலவசமாகச் சட்ட சேவை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வேலையற்றவராக அல்லது குறைந்த சம்பளத்தில் உள்ளவராக இருக்க வேண்டும். சமீபத்திய வெற்றிகரமான வழக்கு விபரங்களை எமது WEB-SITE இல் பார்க்கலாம்.

- Accredited by the Solicitors Regulation Authority and the Legal Services Commission as Providers of the quality service in all areas of Immigration Law.
- Also rated five star by the Good Lawyer Guide.
- Specialises in Immigration and Property law.
- First consultation free - முதலாவது ஆலோசனை இலவசம்.
- For our recent, successful cases please visit our website, which is updated regularly.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ் சைவ சமயப் பெண்ணுக்கும், வெள்ளை இன கிறித்தவப் பெண்ணுக்கும் காலையில் CHURCH, மாலையில் சைவ முறைப்படி லண்டன் மண்டபத்தில் திருமணம் நடந்தது. இரண்டு கலியாண வைபவங்களையும் வீடியோ எடுப்பதற்கு மாப்பிள்ளை வெள்ளை இன நண்பர் ஒருவரை ஒழுங்கு செய்திருந்தார். பெண் வீட்டார் வீடியோவைப் போட்டுப் பார்த்த பொழுது, தாலி கட்டும் முக்கிய காட்சி அங்கு இடம் பெறவில்லை என்பதைத் தெரிந்து கொண்டார்கள். அந்தக் காட்சியை வீடியோ பிடிக்காததைப் பற்றிக் கேட்டபோது, வீடியோகாரர் சொன்ன பதில்:

''தாலிகட்டுகிற நேரத்தில், வாத்தியக்காரர்கள் மிகவும் பலமாகவும் விறுவிறுப்பாகவும் பார்வையாளர்கள் வியக்கும் வண்ணம் விளாசித் தள்ளினார்கள். மதகுரு, இந்தக் காட்சியை எடுக்கச் சொல்லி கையால் எனக்குச் சைகை காட்டினார். இதனை எடுத்து முடிய, 'தாலி கட்டுகிற காட்சி' முடிந்து விட்டது. என் பிழையில்லை''

### தொப்புள் கொடி உறவு

கடந்த இருபத்தைந்து வருடங்களாக இந்திய தமிழ் சினிமா இலங்கைத் தமிழர்களுக்கு, தங்கள் தொப்புள் கொடி உணர்வை வெளிப்படுத்த நடிகைகளின் தொப்புளைச் சுற்றி பல காட்சிகளை எடுத்து வருகிறார்கள்.

### ஆண்களுக்கு ஒளிமயமான எதிர்காலம்..

மது போதையில் இருந்த ஆண் ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய பெண் ஒருவருக்கு 9 மாதச் சிறையும், 40 ஆயிரம் குறோண் அபராதமும் நோர்வே நீதிமன்றம் விதித்திருந்தது.

- ஒளிமயமான எதிர்காலம் ஆணுக்குத் தெரிகிறது.

### பெற்றோம்! தொலைத்தோம்!

இலங்கையில் இருந்து எதை எல்லாம் தொலைத்து விட்டு வந்தோமோ அதை எல்லாம் வெளிநாட்டில் பெற்று விட்டோம்; ஆனால் எதை எல்லாம் பாதுகாத்துக் கொண்டு வந்தோமோ, அவைகளில் பலவற்றைத் தொலைத்து விட்டு நிற்கிறோம்!

### பெண்களுக்கு கஷ்டம்!

வெளிநாட்டில் ஆண்கள் எவ்வளவு புழுக்கத்தையும் தாங்குவார்கள்; அதிகமான பெண்கள் சிறிய புழுக்கத்தையும் கூடத் தாங்க மாட்டார்கள். சம்மர் உடைகள் சாட்சி கூறும்.

### இப்போது வெளிநாட்டில் இப்படி!

ஒரு பெண் பிள்ளை ஒரு பொடியனைக் கலியாணம் செய்யப் போறன் என்று பெற்றோரிடம் சொன்னால் அவர்கள் அந்தரப் பட்டு, ஆத்திரப் பட்டு;

தமிழ் பொடியனோ, வேறை இனமோ- சாதி என்ன, சமயம் என்ன - ஊர் எங்கே- படிப்பு என்ன, சம்பளம் எவ்வளவு என்று கேள்வி கேட்ட காலம், வெளிநாட்டில் போய், 'பொடியனைத்தானே' என்று கேட்கிற காலம் வந்து விட்டது!

### 'மொபைல்' போன்று மற்றொரு தடை!

வாகனம் ஓட்டும் போது 'மொபைல்' பாவிப்பதைப் பல நாடுகள் தடை செய்து வருகின்றன. ஆனால் சாரதி அருகில் அமர்ந்து இருப்பவரின் இம்சை சாரதியின் கவனத்தை 'மொபைல்' போனை விட பல மடங்கு பங்கம் விளைவிப்பதாக ஆய்வுகள் கூறுகின்ற படியால், அருகில் அமர்ந்து இருப்பவரின் பேச்சு, செயல் முதலியவற்றுக்கு வெகுவிரைவில் தடைவர வாய்ப்பு உண்டு.

### முன்மாதிரி!

உங்களை அழைத்த திருமண வைபவங்களுக்கு, அழைக்கப்பட்ட நேரத்துக்குநீங்கள் போயிருந்தீர்களேயானால், உங்கள் வீட்டுத் திருமண வைபவம் ஆரம்பமாகும்போது, அவர்களாவது அழைக்கப்பட்ட நேரத்திற்கு மண்டபத்தில் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

கதிர் துரைசிங்கம்.

# என்ன உலகமடா?



### 'பேஸ்புக்' பார்க்க விடாத குழந்தையை கொன்ற தாய்!


'பேஸ்புக்' கில் இணைந்திருந்த போது இடையூறு விளைவித்த குழந்தையை கொன்ற தாய், தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

அமெரிக்க வட புளோரிடாவைச் சேர்ந்த பெண் ஒருவர் தான் 'பேஸ்புக்' இணையதளத்தினை உபயோகிக்கும் போது இடைஞ்சலாக இருந்த தனது குழந்தையைக் கொல்ல நேரிட்டதாக, தனது குற்றத்தைத் தானே ஒப்புக் கொண்டார்.

அலெக்ஸேண்ரா டொபியஸ் எனும் இப்பெண் 'பேஸ்புக்'கில் உள்ள 'பார்ம்வெளி' எனும் பிரபல கணினி விளையாட்டில் ஈடுபட்டிருந்துள்ளார். அந்நேரத்தில் இவரது 3 மாதங்களேயான குழந்தை அழுதுள்ளது. இதன்போது கோபமடைந்த இவர் ஆத்திரத்தில் குழந்தையைத் தூக்கி வேகமாக குலுக்கவே, அதன் தலை கணினியில் மோதி குழந்தை உயிரிழந்ததாக அலெக்ஸேண்ரா தெரிவித்துள்ளார்.

இவருக்கான தீர்ப்பு எதிர்வரும் டிசம்பர் மாதம் வழங்கப்படவுள்ளது. இவருக்கு சுமார் 25 முதல் 50 வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனை வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### 17 தேவைப்படும் 74 இத்தாலி பிரதமர்!



இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனி (74). கடந்த ஆண்டு 18 வயது இளம்பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருந்ததாக அவர் மீது புகார் வெளியானது. இதைத் தொடர்ந்து அவரை விவாகரத்து செய்வதாக மனைவி வெரோனிகா லாரியோ அறிவித்தார். அதே ஆண்டு ஜுன் மாதத்தில் பட்ரிஷியா டிஅட்டாரியோ என்ற பெண்ணும் பெர்லஸ்கோனி மீது பாலியல் புகார் கூறினார். அடுத்தடுத்து இதுபோன்ற புகார்கள் வெளியானதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில், மீண்டும் அவர் மீது புதிதாக ஒரு பாலியல் புகார் முளைத்துள்ளது. மொராக்கோ நாட்டை சேர்ந்த 17 வயது பெண்ணுடன் இவர் செக்ஸ் உறவு வைத்திருந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

ஒரு தனியார் டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியில் பிரதமர் பெர்லஸ் கோனியின் மிக நெருங்கிய நண்பர் எமிலியோ பெடி என்பவர் இதை தெரிவித்தார்.

சமீபத்தில் அர்கோர் நகரில் உள்ள தனது வீட்டில் பெர்லஸ்கோனி ஒரு விருந்து வைத்தார். அதில் அந்த மொராக்கோ பெண் கலந்து கொண்டார். அவருடன் 20 பெண்கள் பங்கேற்றனர். 2 ஆண்கள் மட்டுமே இருந்தனர்.

விருந்தில் கலந்து கொண்ட அந்த பெண்ணுக்கு பெர்லஸ்கோனி பணத்தை அன்பளிப்பாக அளித்தார் என்றும் எமிலியோபெடி தெரிவித்தார். ஆனால் அப்பெண்ணின் பெயரை அவர் வெளியிடவில்லை. மாறாக ''ரூபி.ஆர்'' என்ற புனைப் பெயருடன் தெரிவித்தார்.

இப்புகாரை 'ரூபி.ஆர்' என்ற பெண் ஒப்புக்கொண்டுள்ளார். பிப்ரவரி 14-ந்தேதி பிரதமர் பெர்லஸ் கோனி நடத்திய காதலர் தின விருந்து நிகழ்ச்சியில் 'பெடி'யுடன் கலந்து கொண்டேன். அதன் பிறகு 2 தடவை கலந்து கொண்டேன் என்று கூறியுள்ளார்.

ஆனால் புகாரை பிரதமர் பெர்லஸ் கோனியின் வக்கீல்கள் மறுத்துள்ளனர். இது பொய்யான, ஆதாரமற்ற குற்றச்சாட்டு என தெரிவித்துள்ளனர்.

### 2 நாட்களாக பிணத்துடன்!

அமெரிக்காவின் நியூயார்க் நகரை சேர்ந்தவர் மைக்கேல் லெனாஹன் (31). இவரது பாட்டி தினாடவுன் என்ற இடத்தில் நோய் வாய்ப்பட்ட நிலையில் ஒரு அடுக்கு மாடி வீட்டில் தங்கியிருந்தார்.

இவருக்கு உதவியாக லோர்னா சாண்டியாகோ (24) என்ற பெண் இருந்தார். சம்பவத்தன்று மைக்கேல் லெனாஹன் அங்கு சென்றிருந்தார்.

அப்போது அவர்கள் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட ஆத்திரத்தில் லோர்னாவை மைக்கேல் அடித்துள்ளார். இதில் அவர் பரிதாபமாக இறந்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த மைக்கேல் இறந்த லோர்னாவின் உடலை என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார். 2 நாட்களாக அவளது பிணத்துடன் தூங்கினார். லோர்னாவின் கிரெடிட் கார்டு மூலம் மது வாங்கி குடித்து பொழுதை கழித்தார். இதற்கிடையே அவர் கொலை செய்யப்பட்ட விஷயம் போலீசாருக்கு தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து மைக்கேல் கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் கடந்த 2007ம் ஆண்டு நடந்தது. இதையடுத்து மைக்கேல் மீது மேன்ஹாட்டன் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த கோர்ட்டு மைக்கேல் குற்றவாளி என அறிவித்துள்ளது. இதைத்தொடர்ந்து நடந்த தவறுக்கு பெரிதும் வருந்துவதாக மைக்கேல் தெரிவித்தார்.

### இரவு நேரங்களில் இப்படி ஆடைகள்!

ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் பெண்கள் விபசாரம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக சட்டம் இயற்றப்பட்டுள்ளது. விபசார அழகிகளுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி அவர்கள் ஸ்பெயினின் பரபரப்பான எல்ஸ் அலாமல் நகரின் கடாலோனியா புறநகர் நெடுஞ் சாலையில் இரவு நேரங்களில் ஒளிரும் உள்ளாடைகளை அணிய வேண்டும். அதுவும் மஞ்சள் நிறத்தை ஒளிரும் ஆடைகளை உடுத்த வேண்டும்.

ஏனெனில் இரவு நேரங்களில் நெடுஞ்சாலையில் செல்லும் வாகன டிரைவர்களை போட்டி போட்டு விபசார அழகிகள் நிறுத்துகின்றனர். இதனால் அதிக அளவில் விபத்துகள் நடக்கின்றன.

அதை தடுக்கவே இது போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒளிரும் உள்ளாடைகளின் மூலம் விபத்துகள் குறைகின்றன. அதையும் மீறி ஒளிரும் உள்ளாடை அணியாத அழகிகளுக்கு ரூ.2500 வரை அபராதம் விதிக்கப்படுகிறது.

அவர்கள் தவிர நெடுஞ்சாலைகளில் நடந்து செல்பவர்களும் இரவில் நன்றாக தெரியக் கூடிய வண்ண உடைகளை அணிந்து செல்ல வேண்டும் என்ற சட்டம் கடந்த 2004 - ம் ஆண்டு முதல் அங்கு அமுலில் உள்ளது.

### '3டி' யில் பார்த்து மகிழ செக்ஸ் படம்!

'3டி' தொழில் நுட்பத்தில் திரில்லர் படம் வந்தாச்சு.... 3டி டிவி வந்தாச்சு... என விஞ்ஞானம் வளர... அதை 'கிளு கிளு' சமாச்சாரத்துக்கும் பயன்படுத்தினால் என்ன என்று தயாரிப்பாளர் யோசித்ததன் விளைவு..... 3 டி எஃபெக்டில் செக்ஸ் படம் ஒன்று தயாராகிறது!

ஹாங்காங்கை சேர்ந்த சினிமா தயாரிப்பாளர் ஸ்டீபன் ஷி யூ என்பவர்தான் இந்தப் படத்தை எடுத்து வருகிறார். ரூ. 15 கோடி செலவில் பிரமாண்டமாய் (?!) தயாரிக்கப்பட்டு வரும் இந்தப் படம் அடுத்த ஆண்டு ரிலீஸாகப் போகிறதாம். சீனாவின் சுயாட்சி மாகாணமான ஹாங்காங்கில்தான் இந்தப் படத்தை முதலில் திரையிடப் போகிறார்களாம்.

அறிவிப்பு வெளியானதிலிருந்து இந்தப் படத்தைப் பார்க்க சீன ரசிகர்கள் ஏக ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஆனால் மெயின்லேண்ட் சீனாவில் இப்போதைக்கு அனுமதி கிடையாதாம். எனவே ஹாங்காங் போய் இந்தப் படத்தைக் காண சீனர்கள் பெரும் ஆர்வம் காட்டிவருகிறார்களாம். முன்பதிவு ஆரம்பித்தாலே, டிக்கெட் வாங்க முண்டியடிப்பதாக சீன தினசரி செய்தி வெளியிட்டுள்ளது.

### நிச்சயதார்த்தத்துக்கு ரூ.4 கோடி மோதிரம்!




ஷரபோவாவின் நிச்சயதார்த்த மோதிரத்தின் விலை 3 கோடியே 75 இலட்சம் ரூபாவாகும். பிரபல ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரிய ஷரபோவாவுக்கும் சுலோவேனியா கூடைப்பந்து வீரர் சஷா உஜாசிசுக்கும் சமீபத்தில் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது.

ஷரபோவாவுக்கு சஷா அணிவித்த நிச்சயதார்த்த மோதிரத்தின் விலை வெளி வந்துள்ளது. அதன் விலை மூன்றே முக்கால் கோடி ரூபாவாகும்.

அது வைரம் பதிக்கப்பட்ட பிளாட்டின மோதிரமாகும். சஷா சுலோவேனியாவைச் சேர்ந்தவர். மரியா ரஷ்யாவைச் சேர்ந்தவர். இருவரும் கடந்த ஒரு வருடமாக காதலித்து வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று கலிபோர்னியாவின் மன்ஹாட்டன் பீச்சில் உள்ள சஷாவின் வீட்டில் வைத்து நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. மரியாவுக்கு சஷா நிச்சயதார்த்த மோதிரத்தை அணிவித்தார். திருமணம் எப்போது என்பது குறித்து இரு தரப்பும் தெரிவிக்கவில்லை. இருப்பினும் விரைவிலேயே இருக்கலாமென்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடரும் தமிழ் பெண்கள் அவலம்!

**அனலை நிதிஸ் ச.குமாரன்**

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர்களை புலிகளிடம் இருந்து விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளித்துள்ளதாக தம்பட்டம் அடித்து உலக நாடுகளிடம் இருந்து ஆதரவைப் பெற பல பிரயத்தனங்களை எடுக்கின்றது. பாதிக்கப்பட்ட தமிழர்களின் வாழ்விலோ குறிப்பாக தமிழ் பெண்களின் வாழ்க்கையில் எந்தவொரு மாற்றத்தையும் காணவில்லை.

மாறாக தமிழ் பெண்கள் போர்க் காலத்தில் எவ்வாறு துன்பங்களை அனுபவித்தார்களோ, அதைவிட பல மடங்கான பிரச்சினைகளை இன்று அனுபவிக்கின்றார்கள்.இவைகள் அனைத்தையும் சிறீலங்கா இராணுவமும், அதனுடன் இயங்கும் கூட்டுக்குழுக்களுமே செய்கின்றன. கற்பழிப்புகளும், கடத்தல்களும், கப்பம் பெறுவதுமாக நிகழ்வுகள் தொடர்கதையாக உள்ளது.

எப்போ தணியும் எங்கள் தாகம் என்று ஏங்கித் தவித்திருந்த தமிழருக்கு, மே 2009-க்கு பிறகு சோதனைகள் பல மடங்காக அதிகரித்தது. பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்த வேளையில் பல லட்சம் மக்கள் நெஞ்சை நிமிர்த்தி நடந்தார்கள். கொடுமையிலும் கொடுமையான சம்பவங்களை கடந்த வருடத்தில் இருந்து தமிழ் மக்கள் அனுபவிக்கின்றார்கள். பல்லாயிரம் புலம்பெயர் தமிழர்கள் நாடு சென்று திரும்பி ஏதோ ஈழத்தில் சுமூக வாழ்வு திரும்பிவிட்டதாக கூறினாலும், நிலைமை படுமோசமாக உள்ளது என்பதுதான் உண்மை.

வீட்டுக்குள் நடக்கும் கூத்துக்கள் வெளியில் தெரியாமலே பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. கலாச்சார சீரழிவான பல நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்பதை தாயகம் சென்று திரும்பும் பலர் கூறுகின்றார்கள். உற்றார் உறவினர்கள் வெளிநாடுகளில் இருந்து சம்பாதித்து அனுப்பும் பணத்தில் வாழ்க்கை நடத்தும் பலருக்கு பொருளாதார ரீதியில் பிரச்சினை இல்லையென்றாலும், இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தாராளமாகவே கலாச்சார சீர்கேடுகளில் ஈடுபடுகின்றார்கள். ஆயுத மோதல்கள் இல்லாத காரணத்தினால் பல இளைஞர்கள் நள்ளிரவு தாண்டியும் வீடு திரும்பாமல் களியாட்டங்களில் ஈடுபடுவதாக தகவல்கள் கூறுகின்றன. இவைகள் அனைத்திற்கும் சிறீலங்கா இராணுவத்தினரும், ஒட்டுக்குழுக்களும் ஒத்தாசை வழங்குவது மட்டுமின்றி ஊக்குவித்தும் வருகின்றார்கள்.

புலிகளுக்கு பயம் இருந்த வேளையில் அடங்கி ஒதுங்கியிருந்த பலர் இன்று சுதந்திரமாக கலாச்சார சீரழிவு சம்பவங்களை செய்கின்றார்கள். இதைத்தான் சிறீலங்காவின் அரசு தமிழர்களுக்கு புலிகளிடம் இருந்து விடுதலை பெற்றுத் தந்துவிட்டதாக தம்பட்டம் அடிக்கின்றது போலும்.

பெண்கள் பல இன்னல்களை சந்திக்கின்றார்கள். கடந்த செப்டம்பர் மாதம் சிறீலங்கா அரசாங்கம் உத்தியோக பூர்வமாக ஒரு அறிவிப்பை அறிவித்தது.

இவ்வறிவிப்பானது, பல தமிழர்களையும் மற்றும் பெண்கள் சார்பான அமைப்புக்களையும் வியப்புக்கு உள்ளாக்கியது. அதன் அறிவிப்பின் படி வடக்கிலும் கிழக்கிலும் 89 ஆயிரம் கணவர்மாரை இழந்த பெண்கள் வசிப்பதாக கூறியது. யுத்தம் நடைபெற்ற வேளையில் ஏதோ இருபதாயிரம் அல்லது முப்பதாயிரம் பெண்களே இப்படியாக இருக்கின்றார்கள் என்று பலர் கருதினார்கள். ஆனால், சிறிலங்காவின் இவ்வறிவிப்பு பலரை அச்சமடையச் செய்தது. சிறீலங்காவின் மகளிர் விவகார பிரதியமைச்சர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாஹ் இது குறித்து தெரிவிக்கையில், கிழக்கில் 49 ஆயிரம் பெண்களும் மற்றும் வடக்கில் 40 ஆயிரம் பெண்களும் கணவர்மாரை இழந்துள்ளனர் என கூறினார். இவர்களில் எட்டாயிரம் பேருக்கு குறைந்தது 3 குழந்தைகளாவது உள்ளதாக தெரிவித்த பிரதியமைச்சர் இவர்களுக்கான உதவி திட்டங்களுக்காக இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

ஏற்கனவே பல இன்னல்களை சந்திக்கும் கணவன்மாரை இழந்து குடும்பத்தை நடத்தும் பெண்கள், சிறீலங்கா இராணுவம் மற்றும் அதனுடன் இயங்கும் ஒட்டுக்குழுக்களால் சந்திக்கும் பிரச்சினைகள் ஏராளம். குடும்பத்தை நடத்த போராடும் இப்பெண்களுக்கு தாம் ஏதோ பொருளாதார உதவி அளிப்பதாக கூறி இவர்களை கலாச்சார சீரழிவான நிகழ்ச்சிகளை நடாத்த துன்பறுத்துவதுடன், பல நெருக்கடிகளையும் கொடுத்து சிங்கள மயமாக்கும் மகிந்தாவின் திட்டத்துக்கு இவர்களை பாவிக்கின்றார்கள்.

இராணுவத்தினர் பல பெண்களுடன் தகாத உறவுகளை வைத்து அவர்களினூடாக குழந்தைகளை பிரசவிக்கும் நிலைமை நடைபெறுகின்றது. பெற்ற குழந்தைகளையே குப்பைத் தொட்டிகளிலும் மற்றும் கிணற்றுக்குள்ளும் வீசி விட்டு போகும் நிலை இன்று பரவலாக தமிழர் தாயகத்தில் நடைபெறுகின்றது என்பதை அறியும்போது தமிழர்களின் கலாச்சார நிகழ்வுகள் எந்தளவில் இருக்கின்றது என உணர முடியும்.

சிறீலங்கா இராணுவத்துடன் போட்டி போட்டுக் கொண்டு ஒட்டுக் குழுக்களும் பல கலாச்சார சீர்கேடான நிகழ்வுகளை செய்கின்றார்கள். குறிப்பாக கற்பழிப்புகள், போதை வஸ்துக்கு அடிமையாக்குதல் மற்றும் இழிவான படங்களை தயாரித்து சந்திக்குச் சந்தி வைத்து அவைகளை விற்று இளையோரை பாழாக்கும் செயல்களில் ஈடுபடுத்துகின்றார்கள். பல பெண்கள் தனியாக இருக்கும்போது நள்ளிரவில் வீடுகளுக்குள் சென்று பெண்களை துன்புறுத்தும் நிகழ்வுகள் பரவலாக நடைபெறுகின்றன. இப்படியாக பல சம்பவங்கள் நடை பெறுகின்ற போதிலும் இவைகளில் பல இருட்டடிப்பு செய்யப்படுகின்றன.

பயிரைப் பாதுகாப்பதாக சொல்லுபவர்களே அழிக்கின்றார்கள். தாம் ஏதோ தமிழர்களின் பாதுகாவலர்களாக இருப்பதாகக் கூறும் சிறீலங்கா அரச படையினர் பெண்களின் பாதுகாப்பில் அச்சுறுத்தலாகவே இருக்கின்றார்கள். பயங்கரவாதிகள் மீண்டும் தலை தூக்கவிடாமல் இருக்க ஒரே வழி இராணுவத்தினரின் அரண்களை பலப்படுத்த வேண்டும் என்ற தோரணையில் செயலாற்றும் சிறீலங்கா, பாதுகாப்புப் படையினரினாலேயே பல அட்டூழியங்கள் செய்யப்படுகின்றன என்பதை மூடி மறைக்க பார்க்கின்றது. மன்னிக்கவும்... பசில் ராஜபக்சாவின் வேண்டுதலின் பெயரிலேயே தமிழரின் கலாச்சார சீரழிவு நிகழ்ச்சிகளை பாதுகாப்புப் படையினர் என்று சொல்லும் இவ் அரச பயங்கரவாதிகள் செய்கின்றார்கள்.

தமிழர் தேசத்திலிருந்து வரும் செய்திகள் மனதை பிளக்கின்றனவையாக இருக்கின்றது. கடந்த மாதம் வன்னியில் பாடசாலை சென்றுவிட்டு பேருந்தில் வீட்டிற்கு பயணம் செய்து கொண்டிருந்த மாணவியை பேருந்தில் வைத்து இராணுவத்தினர் அங்க சேஷ்டை செய்துள்ளனர். முறிப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தில் மொத்தம் 4 பேரே அந்த வேளை பயணித்துள்ளனர். இதில் ஒரு இராணுவ சிப்பாயும் அடங்கும்.

மீதமுள்ள இரு இளைஞர்களும் அச்சத்தால் ஒதுங்கிக் கொண்டதால், பேருந்தில் மாணவியின் நெஞ்சுப் பகுதியோடு அங்க சேஷ்டை செய்தது போதாது என்று அம்மாணவி அணிந்திருந்த அதற்கான உள்ளாடைகளையும் உருவி வெளியே எறிந்துள்ளான் சிங்கள இராணுவ சிப்பாய். மாணவியின் கதறலையும், நிலையையும் புரிந்துகொண்ட ஓட்டுனர், பேருந்தை அருகில் உள்ள இராணுவ முகாமிற்கு ஓட்டிச் சென்று அங்குள்ள உயரதிகாரியிடம் முறையிட்டுள்ளார். சாட்சிகள் ஏதும் உண்டா என உயரதிகாரி கேட்க, அதில் பயணித்த இரு இளைஞர்களும், தாம் கண்டதைக் கூறியும், உங்களை துப்பாக்கியால் சுடுவேன் என அந்த அதிகாரி மிரட்டி, தாக்கியும் உள்ளார். இதனால் அவர்கள் அவ்விடத்தில் இருந்து அகன்றனர்.

இன்னுமொரு சம்பவம் சில வாரங்களின் முன்னர் யாழ், வேலணைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட பெண் வீட்டில் தனித்திருந்த சமயம் வீட்டிற்கு சென்ற சுமார் பத்துப் பேர் கொண்ட குழு குறித்த யுவதியை வீட்டிற்கு வெளியில் இழுத்து பலாத்காரத்திற்கு முயற்சித்துள்ளனர். இதன்போது அயலவர் ஒன்று கூடியதைத் தொடர்ந்து அந்தக் கும்பல் நாளையும் வருவோம் எனக் கூறிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். எனினும் யுவதியின் தமயன், அவரது மனைவி மற்றும் மைத்துனி ஆகியோர் உலக்கையால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த யுவதி முன்னாள் போராளியாக கைதாகி கடந்த ஜனவரி மாதமே விடுவிக்கப்பட்டவராவார். இத்தோடு பெற்றோரை இழந்த 18 வயதான இவர் தற்போது தமையனாரின் வீட்டில் தங்கியிருந்தார். இச்சம்பவம் தொடர்பாக வேலணை காவல் நிலையத்திற்கு சென்று காவல் துறையினரிடம் முறைப்பாடு கொடுக்கச் சென்றபோதும் அவர்கள் உடனடியாக முறைப்பாட்டை எடுக்கவில்லை எனவும் தாமதித்து முறைப்பாடு எடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

மேலும் காவல் துறையினரே இச்சம்பவம் தொடர்பாக வெளியில் தெரிவிக்க வேண்டாம் எனவும் கூறியதாக பாதிக்கப்பட்ட பெண் கூறினார். இதனால் உளரீதியாக பாதிக்கப்பட்ட யுவதி அலரி விதை உட்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்துள்ள நிலையில் காப்பாற்றப்பட்டு சிகிச்சைகளுக்காக யாழ், போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இன்னுமொரு சம்பவம். அக்டோபர் 11-ம் நாள் இடம்பெற்றுள்ளது. யாழ். வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் புதுக்காட்டுச் சந்தியில் வைத்து சம்பவ தினம் மதியம் இரண்டு மணியளவில் வெள்ளை வானில் சென்றவர்களினால் இரண்டு மாணவிகள் கடத்தப்பட்டார்கள். செம்பியன்பற்றுக் கரையோரக் கிராமத்தைச் சேர்ந்த அருளானந்தம் ஜீவா (வயது18), செபஸ்தியான்பிள்ளை ஜெனித்தா(வயது13) ஆகிய மாணவிகளே கடத்தப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் தும்பளையில் உள்ள தமது உறவினர் ஒருவரது வீட்டுக்குச் சென்று விட்டு பேருந்தில் திரும்பி வந்து, புதுக்காட்டுச் சந்தியில் இறங்கினர். வீட்டுக்குச் செல்வதற்கு அங்கு இன்னொரு பேருந்திற்காக காத்திருந்த போதே கடத்தல் இடம்பெற்றுள்ளது. இருவரும் செம்பியன் பற்று அரசினர் தமிழ் காவலன் பாடசாலை மாணவிகள் என கூறப்பட்டுள்ளது. இப்படியாக தினமும் பல இன்னல்களை சந்திக்கின்றார்கள் பெண்கள்.

யுத்தம் இடம் பெற்ற வேளையில் எவ்வாறு வெள்ளை வான்களின் செயற்பாடு இருந்ததோ அதைப் போலவேதான் இப்பொழுதும் இருக்கின்றது. ஆனால் தட்டிக் கேட்க யாரும் இல்லாமல் இவர்களின் இம்சைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. சர்வதேச சிறுவர் தினம் அக்டோபர் 10ம் நாள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ் அரச அதிபர் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ் வைத்தியசாலை தகவல்களின் படி சமீபத்தில் யாழ் மாவட்டத்தில் 77 சிறார்கள் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இவற்றிற்கு சமுதாயத்தில் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களே காரணம் எனக் கூறினார். அரசாங்க உயரதிகாரிகள் தமது கருத்தை எடுத்தியம்பியும் சிறீலங்கா அரசு எந்த விதமான சட்ட நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அரச படையின் அடிமட்ட சிப்பாயிலிருந்து உயர் அதிகாரிகள் வரை தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களுக்கு காரணமானவர்களாக இருக்கின்றார்கள். அரசும் இவர்களின் நடவடிக்கையை கண்டும் காணாமல் இருக்கின்றது.

மேலும் ஒருபடிமேல்ச் சென்று கூறுவோமாயின், ஜனாதிபதி மகிந்தாவின் சகோதரர் பசிலின் நேரடி ஆலோசனையின் பேரிலேயே தமிழ்ப் பெண்களுக்கு எதிரான பல சம்பவங்கள் ஏவிவிடப்படுகின்றன. காரணம் தமிழர்களின் கலாச்சார இருப்பையே அழித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டி இவர்கள் செயல்படுகின்றார்கள். எது என்னவாயினும் தமிழர்களுக்கு என்றொரு அரசியல் தீர்வு எட்டாதுவரையும், சிங்கள இராணுவம் மற்றும் அதனுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுக்குழுக்களும் வடக்குக் கிழக்கு பகுதிகளிலிருந்து துரத்தாதுவரை தமிழ் மக்களின் துயரம் தொடர்ந்து கொண்டே செல்லும். பெண்கள் மற்றும் இளையோர்கள் பல துன்பங்களை சந்திப்பதை எவராலும் குறிப்பாக பலமிழந்து பரிதவிக்கும் தமிழினத்தால் தடுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பா

● **உடுவை எஸ்.தில்லை நடராஜா**



**வா**ழ்க்கையில் அதிகம் ஆசைப்படாமல், நேர்மையுடனும், நெஞ்சு நிறைந்த நட்பு உணர்வுடனும் கடைசி வரையும் வாழ்ந்த ஒரு சமையல்காரரின் வாழ்வை சுவையுடன் சொல்கிறார் ஒரு மகன். தமிழ்நாட்டில் பிறந்த சிங்காரம் பிள்ளையை வறுமை துரத்தியது. கொழும்பைத் தஞ்சம் அடைந்து உடுப்பிட்டி என்ற சிற்றூரான கிராமமொன்றில் இராசம்மா என்ற பெண்ணைக் கைப்பிடித்து தனது மகனை உயர்பதவிகளில் பார்த்த பெருமிதத்துடன் 1990 இல் அமரரான தன் தந்தையைப் பற்றி இலங்கை அரசில் உயர் பதவிகள் வகித்து, இன்று உலக வங்கியில் அதிகாரியாக ஆரவாரமில்லாமல் வலம் வரும் உடுவை எஸ்.தில்லை நடராசா, சுவைப்படச் சொல்கிறார்...

**எ**னக்கு 41 வயது பூர்த்தியாகி 42 வயது ஆரம்பமான வேளை. வேலை முடிந்து மாலை வீடு சென்றதும் தலையிடி ஆரம்பமாகி விடும். மாத்திரைகளில் ஆரம்பித்து தைலம் பூசுவது வரை எல்லாம் செய்து பார்த்து விட்டேன். காலையில் எல்லாம் சரியாக இருக்கும். மூன்று நான்கு நாட்கள் என்னை அவதானித்த அப்பாவை வருத்தத்துடன் பார்த்தேன்.

''பின்னேரம் ஆனவுடன் பயங்கரமாகத் தலை வலிக்கிறது. பெரிய எழுத்துக்களைக் கூட வாசிக்க முடியாது. ஒரே எரிச்சலாக வருகிறது.''

அப்பா வலு சிம்பிளாகச் சொன்னார் :- ''நல்ல கண் டாக்டரிடம் கண்ணைக் காட்டிச் சோதிக்க வேண்டும்'' என்றார்.

கண் டாக்டரின் சோதனையைத் தொடர்ந்து மூக்குக் கண்ணாடி முகத்தில் ஏறியது.

அதற்குப் பின் இரவு பதினோரு மணி வரை மிகச் சிறிய எழுத்துக்களையும் வாசிக்கலாம். ஏனென்றால் தலைவலி வருவதில்லை. எல்லாத் தலைவலிக்கும் மாத்திரையும் தைலமும் மருந்தாகி விடாது. அத்துடன் அப்பா நிறுத்தி விடுவில்லை. இரண்டு மூன்று வருடத்துக்கு ஒரு தடவை தலைவலி கண்வலி வந்தால் மாத்திரைகளை நம்பாமல் டாக்டரைச் சந்திக்க வேண்டுமென்றார்.

***

எண்பது வயதைக் கடந்த நிலையிலும் அப்பா மிகவும் திடகாத்திரமாக இருந்ததோடு எல்லா வேலைகளையும் தானாகவே செய்வார். சில வேளைகளில் மதிய உணவுக்குப் பின் ஒரு மணி நேர பகல் தூக்கம். பெரும்பாலும் வீட்டு வேலைகளை வெகு நேர்த்தியாகச் செய்வார். மற்ற வேளைகளில் விறாந்தையில் சாய்மனைக் கதிரையில் அமர விரும்பாமல் ஒரு சாதாரண்க் கதிரையில் நிமிர்ந்திருப்பார். அவருடன் நன்கு பழக்கமில்லாதவர்கள் வந்தால் மெதுவாக எழுந்து ஓர் அறையில் ஒதுங்கிக் கொள்வார்.

நல்ல மழை காலமானாலும் தினமும் குளிப்பார். வீட்டில் இருக்கும் போது கட்டும் வேட்டியானாலும் சுத்தமான வேட்டியாக இருக்கும்படி பார்த்துக் கொள்வார். நெருங்கிய உறவினர் அயலவர் வீட்டுக்குக் கூட மிக மிக அவசியமெனக் கருதி அரைமணி நேரம் சென்று வருவதானாலும் ''அம்மாடி போயிட்டு வரட்டுமா'' என்று தங்கையின் அனுமதி கேட்பார்.

தங்கையிடம் அனுமதி கேட்பது எனக்குப் பிடிக்காததால் நேரடியாகக் கேட்டேன். அப்பா சிரித்தார். ''பிள்ளைகளுக்கு வயது வந்து விட்டால் அவர்கள் பெரியவர்கள். சாப்பாடோ போக்குவரத்தோ - பிறருடன் கதைப்பதோ கதைக்காமல் விடுவதோ எல்லா விடயங்களிலும் பிள்ளைகள் மனம் கோணாமல் நடக்க வேண்டும். பிள்ளைகளுக்குப் பிடிக்காததை செய்யக் கூடாது.''

● ● ●

உடுப்பிட்டி அ.மி. கல்லூரி மாணவனான என் வயது 15. மாணவர்களுக்காக 'மாணவன்' என்ற சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடும் நோக்கத்தோடு சிறிது சிறிதாக சேமித்த சுமார் 300 ரூபா பணத்தோடு யாழ். நாவலர் அச்சகத்தில் வேலைகளை ஆரம்பித்தேன். அப்பாவுக்கு தெரியாமல் அச்சிட விரும்பியது - யாழ் நகர பஸ் தரிப்பிடத்துக்கு வராமல் ஆனைப்பந்தி சந்தியில் இறங்கி நாவலர் அச்சகம் போய் வரக்கூடிய வசதி- குறைந்த அச்சுக்கட்டணம் - இதனால் நாவலர் அச்சகத்தைத் தெரிவு செய்தேன். 1962ம் ஆண்டு 115 ரூபா கொடுத்து 1000 மாணவன் பிரதிகளை அச்சிட்டேன். பிரதியொன்றின் விலை 15 சதம். வீட்டில் மூடி வைத்த இரகசியம் பாடசாலை மட்டத்தில் பரகசியமாகி - சஞ் சிகைக்கு ஆசிரியனான கதை தங்கையால் வீட்டுக்குத் தெரிய வர அப்பாவும் பணம் கொடுத்து மாணவன் வாங்கிப் படித்து விட்டு என்னிடத்தில் பல கேள்விகள்.

''அப்பாவின் பெயரைச் சொல்லி ஒரு விளம்பரமும் எடுக்க முடிந்ததால் ஒரு பிரதி அச்சிட 10 சதம் செலவு. 12 சதப்படி கடைகளுக்கு ' விற்கலாம். முதலாவது இதழ் விற்பனைக்காக கடைகளுக்குக் கொடுத்துள்ளேன். இரண்டாவது இதழ் அச்சு வேலைகள் நடக்கிறது. முதலாம் இதழ் விற்பனைக் காசில் மூன்றாம் இதழ் அச்சடிக்கலாம். இரண்டாம் இதழ் விற்பனைக் காசில் நாலாம் இதழ்...'' என் கதையை நிறுத்தியது அப்பாவின் அர்த்தம் நிறைந்த சிரிப்பு.

''எந்த விஷயத்தையும் ஆரம்பிக்க ஒரு தெளிவான நோக்கம் இருக்க வேணும். என்ன இலக்குகள் என்பது தீர்மானிக்கப்பட வேணும்- காசும் மற்ற விஷயங்களும் போதியளவு இருக்குதா? எல்லாம் செய்யிறது சாத்தியப்படுமா? பலன்களும் இலாபமும் வருமா? எல்லாம் கவனிக்காவிட்டால் அரைகுறையில் அம்போ'' என்றார்.

இரண்டாவது 'மாணவன்' இதழே இறுதி இதழானது. முன்னூறு ரூபா புத்தக வெளியீட்டில் மூழ்கியது. புதிதாக ஏதாவது செய்ய முனையும் போது - அப்பா சொல்லிய அரைகுறையிலை அம்போ அடிக்கடி மனதில் தோன்றி பலவாறும் சிந்திக்க வைக்கும். அதனால் நல்ல தீர்வுகளைப் பெறாத சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதில்லை.

நிர்வாக சேவை அதிகாரியாக வந்தபின் இலங்கையிலும் வெளி நாடுகளிலும் கலந்து கொண்ட பயிற்சி நெறிகளில் ஆங்கிலத்தில் படித்ததை அப்பாவின் அம்போ புத்திமதியுடன் ஒப்பிட வேண்டி ஏற்பட்டது. ஆங்கிலத்தில் படித்தவை.

PURPOSE - TARGET - GOALS - FEASIBIL-ITY REPORT - BENIFIT - RETURN

அப்பா மட்டுமல்ல - முகாமைத்துவ - நிர்வாக நுட்பம் தெரிந்த பலர் சதாரணமாக வாழ்வதால் நாங்கள் அவர்களைக் கணக்கில் எடுப்பதில்லை.

● ● ●

யாழ். தமிழ்ப்பண்ணை புத்தகசாலைக்கு அண்மையில் அப்பா வேலை செய்த கடை அமைந்திருந்ததாலும் முதலாளி அப்பாவின் நண்பர் என்பதாலும் என் விருப்பம் போல புத்தகங்களை எடுத்துப் படிக்கலாம். 12 வயது மாணவனாக இருந்த போது மர்ம நாவல்களையும் சினிமா தொடர்பான நூல்களையும் சுவாரஸ்யமாக வாசிப்பேன். ஒரு நாளில் சாதாரணமாக ஆறு புத்தகங்களை வாசித்து முடித்து விடுவேன். இந்த விடயம் அப்பாவுக்கும் தெரியும். சுமார் ஒரு வருடத்துக்குப் பிறகு அத்தகைய வாசிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கச் சொன்னார்.

''சின்னகுழந்தை நடக்கிறதுக்கு முதல் நடைவண்டியைக் கொடுத்து நடை பழக்கிறம்- ஓரளவுக்கு வந்தால் நடைவண்டி இல்லாமல் நடக்க வேணும். வாசிக்கிறதில்லை ஒரு விருப்பத்தை ஏற்படுத்திறதுக்காக துப்பறியும் நாவலும் பேசும் [illegible] விரைவாக வாசிக்கப் பழகியாச்சு. இனி நல்ல எழுத்தாளர் யார்? நல்ல புத்தகம் என்ன? எல்லாம் தேடி வாசித்துப் பழக வேணும் - இவ்வளவு நாளும் வாசித்த மர்ம நாவலும் சினிமாவும் ஒண்டுக்குமே பயன்படாது. இது நூறு புத்தகம் வாசிக்கிறதை விட சும்மா ஒரு சின்னப் புத்தகம் வாசித்தாலும் வாழ்க்கைக்கும் சோதனைக்கும் பயன்பட வேணும்.''

அப்பா சில நாட்களாக சில நூல்களைத் தெரிந்து வாசிக்க வழிகாட்டினார். பின்னர் நடைவண்டி இல்லாமல் நடப்பது போலவே அப்பா இல்லாமல் புத்தகத் தெரிவு - வாசிப்பு நல்லதைத்தான் தேடி வாசிக்கின்றேன். ஆரம்பத்தில் சிறிது விட்டுப்பிடித்த அப்பா தருணமறிந்து நிறுத்தி சரியான வழியைக் காட்டி தொடர வைத்திருக்கிறார்.

நல்லவற்றைத் தேடி வாசிக்க வழிகாட்டியவர் எழுதவும் தூண்டிவிட்டார். 1961 டிசம்பர் விடுமுறை ஆரம்பமானதும் தைப்பொங்கலைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி ஈழநாடு காரியாலயத்தில் கொடுக்கும்படி சொன்னார். பல முறை சொன்ன பின் வெட்டி வெட்டி திருத்தி எழுதிக் கொண்டு ஈழநாடு அலுவலகத்துக்கு ஜனவரி முதல் வாரம் சென்று கட்டுரையைக் கொடுத்த போது - TOO LATE எங்கடை பொங்கல் முடிஞ்சு போச்சு என்று சொல்லிக் கொண்டு அச்சு இயந்திரங்கள் இருந்த பகுதிகட்கு கூட்டிச் சென்று காட்டினார்கள். ஈழநாடு என்னைப் பார்த்துச் சிரித்தது. அதற்குப் பின்தான் பத்திரிகையின் சில பகுதிகள் பல நாட்களுக்கே முன் தயாராகும் இரகசியத்தைத் தெரிந்து கொண்டேன்.

● ● ●

அப்பாவுடன் வேலை செய்த ஏனைய தொழிலாளர்களுக்கும் அப்பாவுக்குமிடையே [illegible] நட்புறவு நிலவியது. யாரையும் கடமைப்படுத்தாத வகையில் தனது நடவடிக்கைகளை கவனித்துக் கொள்வார். நான் சிறியவனாக இருந்த காலத்திலேயே யாரிடமிருந்தும் சிறிய தின்பண்டங்கள் விளையாட்டுப் பொருட்கள் உடுப்பு போன்றவை கூட அன்பளிப்பு என வாங்காமல் இருப்பதைக் கவனித்துக் கொள்வார். அப்பா பத்திரிகை, வானொலி வாயிலாக தகவல்கள் சேகரிக்கும் போது திரைப்படங்கள் சினிமாக் கலைஞர்கள் பற்றிய தகவல்களும் சேர்ந்துவிடும். ஆனால் அவர் சினிமா பார்க்கப் போனதில்லை. சக தொழிலாளிகள் அனுமதியுடன் சிறிய வகுப்புகளில் நான் படித்தபோது என்னையும் அழைத்துச் செல்லும்போது மாத்திரம் அவர்கள் வாங்கித் தரும் குளிர்பானங்களைக் குடிப்பேன். டொபி கடலை போன்றவற்றை சாப்பிடுவேன். படம் பார்க்க கிளம்புவதற்கு முன்பாக டிக்கட் காசை மிகத் தந்திரமாகக் கூட்டிக் கொண்டு போகும் தொழிலாளியின் கையில் திணித்து விடுவார். திரைப்பட மாளிகையில் பாட்டுப் புத்தகங்களும் சினிமா நடிகர்களின் படங்களும் விற்கப்படும். பாட்டுப் புத்தகங்களைவிட சினிமா நடிகர்களின் படங்கள்தான் என்னைக் கவர்ந்தன. என்னைக் கவர்ந்த படங்களையும் படம் பார்ப்பதற்கு அழைத்துச் சென்ற மாமாவையும் மாறி மாறிப் பார்த்தேன். பார்வையின் அர்த்தம் புரிந்த மாமா என்னை ஏமாற்ற விரும்பவில்லை.

''மாப்பிள்ளை (கடையில் வேலை செய்வோர் மட்டுமல்ல, வேறு வேலைகளுக்கு வருவோரையும் மாமா என்றழைக்க அப்பா பழக்கியிருந்தார். அவர்கள் என்னை மாப் பிள்ளை - மருமகன் என கூப்பிடுவார்கள்.) உங்களுக்கு இந்த மாதிரி படங்கள் வாங்கிக் கொடுத்தா நம்ம வேலை போயிடும்'' என்றவர் முன்பு நடந்த சம்பவங்களை விளக்கிச் சொன்னார்.

கடையின் சுவர்களில் தெய்வப் படங்களும் வள்ளுவர் பாரதியார் போன்ற அறிஞர்களின் படம் மாத்திரமே இடம் பெறுவதற்கு அப்பாதான் காரணமாம்- சினிமா நடிகர்கள் அரசியல்வாதிகளின் படங்களோடு வரும் காலண்டர்களைக் கூட கடையில் மாட்டுவதற்கு முதலாளி சம்மதிக்காததற்குக் காரணம்- அப்பாவின் கண்டிப்பான வேண்டுகோளே. யாழ். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய சஞ்சிகையொன்றிலும் கடைக்கு சிறப்பு தரும் படங்கள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை இடம் பெற்றிருந்ததை வாசித்த நினைவும் வந்தது.

"யாரோடு எந்தளவுக்குச் சேரலாம்? யாரோடு சேரக்கூடாது? எங்கே எப்படி நழுவ வேண்டும்?" என்பதெல்லாம் மட்டுமல்ல - நான் வேலைக்குச் சேரும் வரை என்னோடு சேர்ந்து பழகுபவர்கள் எனது நடவடிக்கைகள் ஆகியவற்றை தந்தை கண்காணித்துக் கொண்டிருந்தார்.

அந்த நாட்களில் வருடத்தின் இரண்டாவது காலாண்டுக் காலத்தில் 'தினகரன்' பத்திரிகையின் ஆதரவில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் சைக்கிளோட்டப் போட்டிகளுடன் கூடிய விளையாட்டு விழா நடைபெறும். சைக்கிளோட்ட வீரர்களை உற்சாகப்படுத்த பார்வையாளர்கள் தண்ணீரை வாளியோடு ஊற்றுவார்கள். கடையில் வேலை செய்த இளவட்டங்கள் சில ஒன்று சேர்ந்து குறும்பு வேலைக்குத் திட்டமிட்டு ஒரு வாளியையும் கொண்டு சமையறைக்குள் புகுந்து வெளியேறியதை அப்பாவின் கழுகுக் கண்கள் கவனித்து விட்டன. சமையலறையிலிருந்து இளவட்டங்களைப் பின் தொடர்ந்த அப்பாவின் கைகளில் பெரிய வாளியொன்றில் நிரம்பியிருந்த நீரிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது.

விரைந்து வந்து கொண்டிருந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கியின் அறிவிப்பு-

'சைக்கிளோட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் பெண் வீராங்கனைகள் வேகமாக வருகின்றனர்'.

இளவட்டங்களிலொன்று தண்ணீர் நிரம்பிய வாளியை தூக்க மற்ற இளவட்டங்கள் வேடிக்கை பார்க்க முண்டியடித்தன. அப்பாவும் பெரிய வாளியைத் தூக்கினார். அவர் கண்கள் சிவந்திருந்தன.

"அடே! தண்ணியைக் கொட்டிட்டு உள்ள போ - இல்லே இந்த வாளியில இருக்கற தண்ணிய உன் தலையிலே ஊத்துவன்".

இளவட்டத்தின் கையிலிருந்த வாளி கீழே விழ வாளியிலிருந்த கொதி நீர் நிலமெங்கும் சிதறியது. சைக்கிளோட்டப் போட்டியில் கலந்து கொண்ட பெண்களுக்கு சுடுதண்ணீர் ஊற்ற முயன்ற இளவட்டங்கள் தங்கள் தவற்றை உணர்ந்து தலைகளைத் தாழ்த்திக் கொண்டன.

சமையலறையை நோக்கித் திரும்பிய அப்பாவின் கையிலிருந்த வாளித் தண்ணீர் சூடு ஆறியிருந்தது. அப்பாவின் சாதுர்யத்தால் அந்த இடத்தில் பெண்களுக்கு நேர இருந்த விபத்தும் ஆண்களுக்கு நேர இருந்த அவமானமும் தவிர்க்கப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் ராசி எப்படி?

## 16-11-2010 முதல் 30-11-2010 வரை

கலாநிதி ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் (009411) 255 4328, (0094) 777915 685 (கொழும்பு)

### மேடம்



மேடராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலன்கள். எடுக்கின்ற முயற்சிகளில் தடங்கல் இல்லாத வெற்றி. தொழில் ரீதியில் அலைச்சல் வரலாம். சொத்து விஷயங்கள் நல்ல பயனைத் தரும். பணவரவில் பிரச்சனையில்லை. குடும்பத்தில் மகிழ்ச்சி. கடன் பிரச்சனைகள் இழுபறி. மாணவர்கள் கல்வி நிலையில் சற்றுக் கவனம் எடுக்க வேண்டும். 18ம், 23ம், 27ம் திகதிகள் அனுகூலமான நாட்கள்.

### ரிஷபம்



ரிஷபராசி அன்பர்களுக்கு யோகமான நற்பலன்கள். எடுக்கின்ற முயற்சிகள் பலனைத் தரும். தொழில் ரீதியில் முன்னேற்றம். பண வரவில் திருப்தி. குடும்பத்தில் சுப காரிய நிகழ்வுகள், மகிழ்ச்சி நிலவும். திடீர் பணவரவு. கடன் பிரச்சனைகளில் அனுகூலமான பலன்கள் வந்து சேரும். மாணவர்கள் கல்வி நிலையில் முன்னேற்ற பலன்கள் வந்து சேரும். 19ம், 24ம், 28ம் திகதிகள் நல்ல நாட்கள்.

### மிதுனம்



மிதுனராசி அன்பர்களுக்கு ஓரளவுக்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் ரீதியில் அலைச்சல். தொழில் சார்ந்த பயணங்கள் வரலாம். பதவி மாற்றங்கள் அமையும். பணவரவு ஓரளவு உண்டு. குடும்பத்தில் மத்தியமான மகிழ்ச்சி. கடன் பிரச்சனைகளில் இழுபறி வெளிநாட்டு பிரயாணங்கள் நிகழலாம். மாணவர் கல்வி நிலையில் அனுகூலமான பலன் உண்டு. 19ம், 23ம், 27ம் திகதிகள் அனுகூலமான பலன்கள்.

### கடகம்:



கடகராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலாபலன்கள். தொழில் ரீதியில் மிகவும் சிறப்பான வெற்றிகள் ஏற்படும். எடுக்கிற முயற்சிகள் அனுகூலமான பலன் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி, சுபகாரிய அனுகூலங்கள் ஏற்படும். பணவரவு திருப்திகரமானதாக அமையும். நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். மாணவர் கல்வி நிலையில் முன்னேற்றகரமான பலன் அமையும். 20ம், 23ம், 25ம் திகதிகள் பலன் தரும் நாட்கள்.

### சிம்மம்



சிம்மராசி அன்பர்களுக்கு சுமாரான, மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் ரீதியில் சிறுசிறு அலைச்சல், தாமத நிலைகள் ஏற்படும். குடும்பத்தில் ஓரளவு சுமாரான பலன்கள். திடீர் உடற்சுகயீனம். கடன் பிரச்சனைகளில் இழுபறி. எந்த விஷயமும் நிதானம் கடைப்பிடிப்பது நல்லது. மாணவர் கல்வி நிலையில் அனுகூலம். 19ம், 23ம், 28ம் திகதிகள் நல்ல அனுகூலமான நாட்கள்.

### கன்னி



கன்னி ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன்கள். தொழில் ரீதியில் நன்மைகள் தரும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு மந்த நிலை. குடும்பத்தில் ஓரளவுக்கு அனுகூலம். திருமணம் தொடர்பான முடிவுகள் திருப்தியாக நடக்கும். பணவரவு பிள்ளைகளால் இழுபறியாக இருக்கும். கடன் பிரச்சனைகள் தாமதமாக நடக்கும். மாணவர்களின் கல்வியில் ஓரளவுக்கு அனுகூலமுண்டு. 19ம், 23ம், 27ம் திகதிகளில் நன்மையான பலன் உண்டு.

### துலாம்



துலாம் ராசி அன்பர்களுக்கு சுமாரான பலன்கள். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழிலில் அலைச்சல், இழுபறி, பணவரவு எதிர்பார்க்கிற மாதிரி நடக்காது. குடும்பத்தில் அனுகூலமான பலாபலன்கள், சுகயீனங்கள் வரலாம். எதிரிகளால் தொல்லை. கடன் பிரச்சனையில் சற்று இழுபறியே. மாணவர்கள் கல்வி நிலையில் சுமாரான பலாபுலன்களே அமையும். 19ம், 24ம், 28ம் திகதிகள் அனுகூலமான நாட்கள்.

### விருச்சிகம்



விருச்சிக ராசி அன்பர்களுக்கு சிறப்பான நற்பலாபலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள். தொழில் ரீதியில் நல்ல முன்னேற்றம். பணவரவு மிகவும் திருப்தி. குடும்பத்தில் மகிழ்வு; சுபகாரிய நிகழ்வு. எதிர்பார்க்கின்ற விடயங்களில் வெற்றி. கடன் பிரச்சனையில் சுமூகமான நிலைமை. மாணவர்கள் கல்வி நிலையில் முன்னேற்றங்கள். 18ம், 23ம், 27ம் திகதிகள் அனுகூலமான நாட்கள்.

### தனுசு



தனுசு ராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் ரீதியில் அலைச்சல். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் அவசியம். தாயார் வழியில் செலவீனங்கள். திடீர் உடல் நிலையில் பாதிப்பு. குடும்பத்தில் ஓரளவு அனுகூலம். பணவரவு சற்று சுமாரானதாக இருக்கும். கடன் பிரச்சனைகளில் இழுபறி. மாணவர்கள் கல்வி நிலையில் முன்னேற்றம். 21ம், 23ம், 30ம் திகதிகள் அனுகூலமான நாட்கள்.

### மகரம்



மகர ராசி அன்பர்கள் அனுகூலமான பலன்களையே எதிர்பார்க்கலாம். எடுக்கின்ற முயற்சிகளில் இழுபறி, தாமத நிலை, கஷ்டப்பட்டே வெற்றியைப் பெற வேண்டும். தொழில் ரீதியில் சிறு சிறு அலைச்சல். குடும்பத்தில் சுமாரான பலன்களுக்கே இடமுண்டு. பணவரவு எதிர்பார்த்தபடி இருக்காது. கடன் பிரச்சனைகளில் சிறு சிறு இழுபறி நிலையே தொடரும். மாணவர் கல்வி நிலையில் சற்று கவனம் வேண்டும். 19ம், 23ம், 26ம் திகதிகள் அனுகூலமான நாட்கள்.

### கும்பம்



கும்ப ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான யோகமான நற்பலாபலன்கள் அமையும. எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றி. தொழிலில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் நல்ல மகிழ்ச்சி; சுபகாரியத்துக்கும் இடமுண்டு. பணவரவில் திருப்தி. எதிர்பார்க்கின்ற விடயங்களில் வெற்றி. கடன் பிரச்சனைகளில் சுமூகமான நிலை. மாணவர்கள் கல்வி நிலையில் நல்ல முன்னேற்றம். 18ம், 23ம், 29ம் திகதிகள் அனுகூலமான நாட்கள்.

### மீனம்



மீன ராசி அன்பர்களுக்கு சுமாரான, மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் ரீதியில் சிறு சிறு அலைச்சல், தாமத நிலை. திடீர் சுகயீனங்களுக்கு இடமுண்டு. பணவரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் மத்திமமான மகிழ்ச்சி, கடன் பிரச்சனையில் தாமத, இழுபறி நிலை. மாணவர்களின் கல்வி நிலையில் மந்தநிலை. 21ம், 23ம், 30ம் திகதிகள் அனுகூலமான நாட்கள்.


A-Lanka Travel Ltd

171 Tooting High Street, Tooting, London SW 17 OSZ




உலகத்தின் எப்பாகத்திற்கும்
நியாயமான விலையில் விமானச்
சீட்டுக்களை உடன் பெற்றிட
நம்பிக்கையான தமிழர் நிறுவனம்

For Special Family Discount
And Emergency Ticket Only
Please Contact Mr. Wimal on
07956 206 709

8-வது ஆண்டை நோக்கி...

வாரத்தில் 7 நாட்களும் எமது முழுமையான சேவை
உங்கள் சகல பிரயாணத் தேவைகளுக்கும் அழையுங்கள்

Phone: 020 8672 5551 020 8672 2010 Fax: 020 8682 1974
E-mail: wimal@a-lankatravel.co.uk Web: a-lankatravel.co.uk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



குறொய்டனில் புதிய,
புதுமையான அறுசுவை உணவகம்

# DOSA
LOUNGE

Non Vegetarian | Pure Vegetarian

04-11-2010ல் கோலாகலமாக நடந்தது திறப்புவிழா









## Restaurant & TAKE AWAY

**Party Hall Available**

நீங்கள் Pure Vegetarian என்றால், உங்களுக்கு தனியான பகுதி
- அது மட்டுமல்ல, சைவ உணவு பிறம்பான குசினியில் தயாரிக்கப்படுகின்றன.

நீங்கள் Non-Vegetarian என்றால், உங்களுக்கு தனியான பகுதி
- அவை தனியான குசினியில் தயாரிக்கப்படுகின்றன.

**5-7, St. JAMES ROAD, CROYDON CRO 2 SB**

**020 8684 6661**

(முன்னாள் AACHI MASALA)



FUSHIA



Awarded For the "BEST INDIAN RESTAURANT" IN ITS CLASS
& Winner of " Best Chef" by Customer Excellence Awards 2010

## Fushia Indian Restaurant

Presents

# Diwali Family Dinner & Dance

with mouth watering 4 course dinner with Bollywood Dancer (Neelal)

Saturday 13th November 2010 (7.00pm till late).

To bring you excellent dinner and dance experience for 2010

**DJ PRECIOUS – PARMJIT SINGH (SIMPLY BHANGRA.COM)**

Celebrate Diwali In Style With Bollywood Dance and a Perfect Indian 4 Course Meal

**Address: No 3 Brighton Road, South Croydon, CR2 6EA**

**Call Today to Make Your Reservation on 020 7998 1693 or 07958 42 42 22**

Ticket price : £16 in advance (£21@the door)

info@fushiauk.com • www.fushiauk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16-11-2010 முதல் 30-11-2010 வரை நிகழ்ச்சி நிரல்

## 10வது ஆண்டு

### செவ்வாய் 16-11-2010

06.30 காலைக்கதிர் நேரடி ஒளிபரப்பு
09.30 தேனமுது
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 சலனம்
11.30 நம் ஊர் சமையல்
12.00 செய்தி
12.30 இசைத் தென்றல்
13.00 திரை விருந்து
15.30 மனதோடு மனோ
16.00 செய்தி
16.05 மனதோடு மனோ
16.30 திரைமசாலா
17.00 தவம்
17.30 அழகான நாட்கள்
18.00 செய்தி
18.30 இதயம் தொட்ட கதை
19.00 சிம்ரன் சின்னத் திரை
19.30 செல்லமே
20.00 எதிரொலி
21.00 செய்தி
21.30 புலனாய்வு
22.00 சிம்ரன் சின்னத் திரை
22.30 இதயம் தொட்ட கதை

### புதன் 17-11-2010

06.30 காலைக்கதிர் நேரடி ஒளிபரப்பு
09.30 பழமை தந்த இனிமை
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 சலனம்
11.30 ரசிக்க ருசிக்க
12.00 செய்தி
12.30 நட்சத்திர நேரம்
13.00 திரை விருந்து
16.00 செய்தி
16.05 சொக்குதே மனம்
16.30 கார்டுன்
17.00 தவம்
17.30 அழகான நாட்கள்
18.00 செய்தி
18.30 சிம்ரன் சின்னதிரை
19.00 இதயம் தொட்ட கதைகள்
19.30 செல்லமே
20.00 திண்ணையில் நைனர்
20.30 பிடிக்கல பிடிக்கல
21.00 செய்தி
21.30 மூன்றாம் பார்வை - நேரடி நிகழ்ச்சி
22.00 சிம்ரன் சின்னதிரை
22.30 இதயம் தொட்ட கதைகள்

### வியாழன் 18-11-2010

06.30 காலைக்கதிர்
9.00 இதயராகம்
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 சலனம்
11.30 கவிஞனின் குரல்
12.00 செய்தி
12.30 திரை மசாலா
13.00 திரை விருந்து
16.00 செய்தி
16.05 ஏமாற்றாதே ஏமாறாதே
16.30 இசைக்கச்சேரி
17.00 தவம்
17.30 அழகான நாட்கள்
18.00 செய்தி
18.30 சிம்ரன் சின்னதிரை
19.00 இதயம் தொட்ட கதை
19.30 செல்லமே
20.00 இளையவலம்
20.30 பதிவுகள்
21.00 செய்தி
21.30 ஊசிகுமார்.காம்
22.00 சிம்ரன் சின்ன திரை
22.30 இதயம் தொட்ட கதைகள்

### வெள்ளி 19-11-2010

06.30 காலைக்கதிர்
09.30 சங்கீத காலை
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 சலனம்
11.30 ரசிக்க ருசிக்க
12.00 செய்தி
12.30 நட்சத்திர நேரம்
13.00 திரை விருந்து
15.30 ராகமாலிகா
16.00 செய்தி
16.05 ராகமாலிகா
16.30 இசைக்கச்சேரி
17.00 தவம்
17.30 பக்தி கீதம்
18.00 செய்தி
18.30 ஞானதீபம்
19.00 நம்மவர் கைவண்ணம்
19.30 செல்லமே
20.00 சதுரங்கம் - நேரடி நிகழ்ச்சி
21.00 செய்தி
21.30 சொக்குதே மனம்
22.00 நகைச்சுவை நேரம்
22.30 இசை தென்றல்

### சனி 20-11-2010

07.00 ஒரு படப்பாடல்
07.30 ஒளி பரவட்டும்
07.45 இந்த நாள் இனிய நாள்
08.00 தினப்பலன்
08.10 திரை மசாலா
08.30 பிள்ளைத்தமிழ்
08.45 நகைச்சுவை நேரம்
09.15 குட்டீஸ் கிளப் - நேரடி நிகழ்ச்சி
10.30 செல்லமே - மறுஒளிபரப்பு
12.00 செய்திகள்
12.05 நாளைய உலகம்
12.30 வாங்க பேசலாம்
13.30 திரை விருந்து
14.00 செய்திகள்
14.05 திரை விருந்து
16.00 செய்திகள்
16.05 திரை மசாலா
16.30 இதய சங்கமம்
17.00 திரைவலம்
17.30 என் ஸ்டைல்
18.30 ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
19.30 செய்திகள்
20.00 திரை விருந்து
22.00 மறுஒளிபரப்பு

### ஞாயிறு 21-11-2010

07.00 ஒரு படப்பாடல்
07.30 ஒளி பரவட்டும்
07.45 இந்த நாள் இனிய நாள்
08.00 கவிச்சோலை
08.30 ஆங்கிலம் கற்போம்
09.00 ராசிபலன்
09.30 பதிவுகள்
10.30 ஆலோசனை நேரம்
11.00 இளைய வளம்
11.30 நம்ம ஊர் சமையல்
12.00 செய்திகள்
12.05 சிந்திக்க சேமிக்க - நேரடி நிகழ்ச்சி
13.00 திரைவிருந்து
16.00 செய்திகள்
16.05 தகதிமிதா
16.30 சபாஷ் மீரா
17.30 ராகமாலிகா
18.30 ஏமாறாதே ஏமாற்றாதே
19.00 கவிஞனின் குரல்
19.30 செய்திகள்
20.00 பிடிக்கல பிடிக்கல
20.30 மனதோடு மனோ
21.30 இரவின் தாலாட்டு

### திங்கள் 22-11-2010

06.30 காலைக்கதிர் நேரடி ஒளிபரப்பு
09.30 பழைமை தந்த இனிமை
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 புதுமைப் பெண்கள்
11.00 சலனம்
11.30 ரசிக்க ருசிக்க
12.00 செய்தி
12.30 டாப் 10 மூவிஸ்
13.00 திரை விருந்து
15.30 என்னோடு பாட வாருங்கள்
16.00 செய்தி
16.05 என்னோடு பாட்டுப் பாடுங்கள்
16.30 கார்டுன்
17.00 தவம்
17.30 அழகான நாட்கள்
18.00 செய்தி
18.30 இதயம் தொட்ட கதை
19.00 சிம்ரன் சின்னதிரை
19.30 செல்லமே
20.00 இரகசிய தோழி
21.00 செய்தி
21.30 புலனாய்வு
22.00 சிம்ரன் திரை
22.30 இதயம் தொட்ட கதைகள்

### செவ்வாய் 23-11-2010

06.30 காலைக்கதிர் நேரடி ஒளிபரப்பு
09.30 தேனமுது
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 சலனம்
11.30 நம் ஊர் சமையல்
12.00 செய்தி
12.30 இசைத் தென்றல்
13.00 திரை விருந்து
15.30 மனதோடு மனோ
16.00 செய்தி
16.05 மனதோடு மனோ
16.30 திரைமசாலா
17.00 தவம்
17.30 அழகான நாட்கள்
18.00 செய்தி
18.30 இதயம் தொட்ட கதை
19.00 சிம்ரன் சின்னத் திரை
19.30 செல்லமே
20.00 எதிரொலி
21.00 செய்தி
21.30 புலனாய்வு
22.00 சிம்ரன் சின்னத் திரை
22.30 இதயம் தொட்ட கதை

## தீபம்

உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி

### தீபம் செய்தி நேரங்கள்

திங்கள் முதல் வெள்ளி வரை

| | |
|---|---|
| காலை | 7.00,10.00 மணி |
| நண்பகல் | 12.00 மணி |
| பிற்பகல் | 2.00 மணி |
| மாலை | 16.00, 18.00 மணி பிரதான செய்திகள் |
| இரவு | 21.00 மணி பிரதான செய்திகள் |

வார இறுதி நாட்கள் சனி, ஞாயிறு

| | |
|---|---|
| நண்பகல் | 12.00 மணி |
| மாலை | 16.00 மணி |
| இரவு | 19.30 மணி பிரதான செய்திகள் |


மற்றொரு வெகுமதியான

**தீபம் டிவியின் புதிய சலுகை**

தீபம் பார்க்க ஒரு வருடத்துக்கு புதிய சந்தா இப்போது

**£75** மட்டுமே!

புதுப்பிக்க

**£60** மட்டுமே!

தீபம் நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ...

**020 8814 6565**


### புதன் 24-11-2010

06.30 காலைக்கதிர் நேரடி ஒளிபரப்பு
09.30 பழமை தந்த இனிமை
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 சலனம்
11.30 ரசிக்க ருசிக்க
12.00 செய்தி
12.30 நட்சத்திர நேரம்
13.00 திரை விருந்து
16.00 செய்தி
16.05 சொக்குதே மனம்
16.30 கார்டுன்
17.00 தவம்
17.30 அழகான நாட்கள்
18.00 செய்தி
18.30 சிம்ரன் சின்னதிரை
19.00 இதயம் தொட்ட கதைகள்
19.30 செல்லமே
20.00 திண்ணையில் நைனர்
20.30 பிடிக்கல பிடிக்கல
21.00 செய்தி
21.30 மூன்றாம் பார்வை - நேரடி நிகழ்ச்சி
22.00 சிம்ரன் சின்னதிரை
22.30 இதயம் தொட்ட கதைகள்

### வியாழன் 25-11-2010

06.30 காலைக்கதிர்
9.00 இதயராகம்
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 சலனம்
11.30 கவிஞனின் குரல்
12.00 செய்தி
12.30 திரை மசாலா
13.00 திரை விருந்து
16.00 செய்தி
16.05 ஏமாற்றாதே ஏமாறாதே
16.30 இசைக்கச்சேரி
17.00 தவம்
17.30 அழகான நாட்கள்
18.00 செய்தி
18.30 சிம்ரன் சின்னதிரை
19.00 இதயம் தொட்ட கதை
19.30 செல்லமே
20.00 இளையவலம்
20.30 பதிவுகள்
21.00 செய்தி
21.30 ஊசிகுமார்.காம்
22.00 சிம்ரன் சின்ன திரை
22.30 இதயம் தொட்ட கதைகள்

### வெள்ளி 26-11-2010

06.30 காலைக்கதிர்
09.30 சங்கீத காலை
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 சலனம்
11.30 ரசிக்க ருசிக்க
12.00 செய்தி
12.30 நட்சத்திர நேரம்
13.00 திரை விருந்து
15.30 ராகமாலிகா
16.00 செய்தி
16.05 ராகமாலிகா
16.30 இசைக்கச்சேரி
17.00 தவம்
17.30 பக்தி கீதம்
18.00 செய்தி
18.30 ஞானதீபம்
19.00 நம்மவர் கைவண்ணம்
19.30 செல்லமே
20.00 சதுரங்கம் - நேரடி நிகழ்ச்சி
21.00 செய்தி
21.30 சொக்குதே மனம்
22.00 நகைச்சுவை நேரம்
22.30 இசை தென்றல்

### சனி 27-11-2010

07.00 ஒரு படப்பாடல்
07.30 ஒளி பரவட்டும்
07.45 இந்த நாள் இனிய நாள்
08.00 தினப்பலன்
08.10 திரை மசாலா
08.30 பிள்ளைத்தமிழ்
08.45 நகைச்சுவை நேரம்
09.15 குட்டீஸ் கிளப் - நேரடி நிகழ்ச்சி
10.30 செல்லமே - மறுஒளிபரப்பு
12.00 செய்திகள்
12.05 நாளைய உலகம்
12.30 வாங்க பேசலாம்
13.30 திரை விருந்து
14.00 செய்திகள்
14.05 திரை விருந்து
16.00 செய்திகள்
16.05 திரை மசாலா
16.30 இதய சங்கமம்
17.00 திரைவலம்
17.30 என் ஸ்டைல்
18.30 ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
19.30 செய்திகள்
20.00 திரை விருந்து
22.00 மறுஒளிபரப்பு

### ஞாயிறு 28-11-2010

07.00 ஒரு படப்பாடல்
07.30 ஒளி பரவட்டும்
07.45 இந்த நாள் இனிய நாள்
08.00 கவிச்சோலை
08.30 ஆங்கிலம் கற்போம்
09.00 ராசிபலன்
09.30 பதிவுகள்
10.30 ஆலோசனை நேரம்
11.00 இளைய வளம்
11.30 நம்ம ஊர் சமையல்
12.00 செய்திகள்
12.05 சிந்திக்க சேமிக்க - நேரடி நிகழ்ச்சி
13.00 திரைவிருந்து
16.00 செய்திகள்
16.05 தகதிமிதா
16.30 சபாஷ் மீரா
17.30 ராகமாலிகா
18.30 ஏமாறாதே ஏமாற்றாதே
19.00 கவிஞனின் குரல்
19.30 செய்திகள்
20.00 பிடிக்கல பிடிக்கல
20.30 மனதோடு மனோ
21.30 இரவின் தாலாட்டு

### திங்கள் 29-11-2010

06.30 காலைக்கதிர் நேரடி ஒளிபரப்பு
09.30 பழைமை தந்த இனிமை
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 புதுமைப் பெண்கள்
11.00 சலனம்
11.30 ரசிக்க ருசிக்க
12.00 செய்தி
12.30 டாப் 10 மூவிஸ்
13.00 திரை விருந்து
15.30 என்னோடு பாட வாருங்கள்
16.00 செய்தி
16.05 என்னோடு பாட்டுப் பாடுங்கள்
16.30 கார்டுன்
17.00 தவம்
17.30 அழகான நாட்கள்
18.00 செய்தி
18.30 இதயம் தொட்ட கதை
19.00 சிம்ரன் சின்னதிரை
19.30 செல்லமே
20.00 இரகசிய தோழி
21.00 செய்தி
21.30 புலனாய்வு
22.00 சிம்ரன் திரை
22.30 இதயம் தொட்ட கதைகள்

### செவ்வாய் 30-11-2010

06.30 காலைக்கதிர் நேரடி ஒளிபரப்பு
09.30 தேனமுது
10.00 செய்தி
10.05 நகைச்சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 சலனம்
11.30 நம் ஊர் சமையல்
12.00 செய்தி
12.30 இசைத் தென்றல்
13.00 திரை விருந்து
15.30 மனதோடு மனோ
16.00 செய்தி
16.05 மனதோடு மனோ
16.30 திரைமசாலா
17.00 தவம்
17.30 அழகான நாட்கள்
18.00 செய்தி
18.30 இதயம் தொட்ட கதை
19.00 சிம்ரன் சின்னத் திரை
19.30 செல்லமே
20.00 எதிரொலி
21.00 செய்தி
21.30 புலனாய்வு
22.00 சிம்ரன் சின்னத் திரை
22.30 இதயம் தொட்ட கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவராத திடுக்கிடச் செய்யும் தகவல்கள், ஆதாரங்களுடன் புதிய தொடர் - 17

# ராஜிவ் கொலை வழக்கு

குப்புசாமி ரகோத்தமன்

## துண்டுக் காகிதம்

கூட்டத்துக்கு ராஜிவ் காந்தி வந்ததும் நேரே மேடைக்கு போய்விடுவார். வழியில் மாலை போடுகிற திட்டம் முதலில் கிடையாது. மேடையில்தான் மாலைகள். எனவே மாலை போட அனுமதிக்கப்பட்டிருந்தவர்களை முதலில் மேடைக்கு அருகே பின்புறம்தான் நிற்க வைத்திருந்தார்கள்.

ஆனால் ராஜிவ் காந்தி வருவது மிகவும் தாமதமாகிப் போனதால் (எட்டு மணிக்கு வருவதாக இருந்தவர், வந்து சேர்ந்தபோது மணி பத்து) மேடையில் வரிசையாக மாலை போட்டுக் கொண்டிருக்க முடியாத சூழல். ஒப்புக்கு ஒரு மூன்று பேரை மட்டும் மேடையில் மரியாதை செய்ய ஏற்பாடு செய்து விட்டு, மற்றவர்களை அவர் வரும்போதே மாலை போட்டுவிடச் சொல்லி ஏ.ஜே.தாஸ் என்னும் நிர்வாகி சொல்லியிருந்தார். மைக்கிலேயே இதனை அறிவித்தார் அவர்.

இந்த திடீர் மாற்று ஏற்பாட்டில் கூட்டம் சற்று கலகலத்துப் போனது. மாலை போடும் ஆர்வத்தில் மேடைக்குப் பின்னால் காத்திருந்த முழுக்கூட்டமும் முண்டியடித்துக் கொண்டு முன்புறம் ஓடிவரத் தொடங்கி விட்டார்கள். இந்தக் கூட்டத்தில் லதா கண்ணன், லக்ஷ்மி ஆல்பர்ட், ரமா தேவி என்று பட்டியலில் இருந்த காங்கிரஸ் பிரமுகர்களும் அடக்கம்.

இந்த மாலை விவகாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கெனவே ராஜேந்திரன் என்னும் சப் இன்ஸ்பெக்டரை நியமித்திருந்தார்கள். ராஜிவ் வரும்போது யார் யார் அவருக்கு மாலை போடவேண்டும் என்று முன்கூட்டியே நிகழ்ச்சி நிர்வாகிகளைக் கேட்டு, பட்டியல் தயாரித்து, அவர்களை மட்டும் அனுமதிக்க வேண்டியது அவரது பணி.

அதே மாதிரி அனுசூயா என்கிற பெண் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரிடம், அப்படி ராஜிவை நெருங்கி மாலையிட வருகிற அனைவரையும் முன்கூட்டியே பரிசோதித்து வைக்க வேண்டுமென்றும் உத்தரவு இருந்தது.

ஆனால் இரண்டும் நடக்கவில்லை. சப் இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் மாலை போடுகிறவர்களின் பட்டியலை எழுதி வைத்திருந்த லட்சணத்தைப் பின்னால் நாங்கள் பார்க்க நேர்ந்த போது அதிர்ச்சியின் உச்சத்துக்கே சென்றோம். ஒரு கசங்கிப் போன துண்டு காகிதத்தில், ஒரு வரிசையில்லாமல், சீரியல் நம்பர் இல்லாமல், மாலை போடுகிறவர்கள் யார் என்ன என்கிற விவரம் இல்லாமல்- ஏதோ சொல்லிவிட்டார்களே என்பதனால் கீழே கிடந்த குப்பைக் காகிதத்தில் நாலு பெயர்களைக் கிறுக்கி வைத்திருந்தார்!.

இம்மாதிரி விவிஐபிக்கள் பொதுக்கூட்டத்துக்குப் பாதுகாப்புக்குச் செல்லும் காவலர்களுக்கென்று இதற்கெல்லாம் தனியான விதிமுறைகளே உண்டு. மாலை போடுகின்றவர்களின் பெயர்களை எழுதி வை என்று சொன்னால், பெயர், முகவரி, அவர் யார், என்ன வேலை பார்க்கிறவர், அவரை சிபாரிசு செய்தவர் யார் என்று அனைத்து விவரங்களையும் ஒழுங்காக ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதியாக வேண்டும்.

போலீஸ் டைரி என்றே சொல்வார்கள். ஒவ்வொருவரும் தமக்கு ஒதுக்கப்படும் பணிகளைத் துல்லியமாக நோட்டுப் புத்தகத்தில் குறிப்பிட்டாக வேண்டியது அவசியம். சப் இன்ஸ்பெக்டர்கள் ஒழுங்காகக் கடமையைச் செய்கிறார்களா என்று உள்ளூர் எஸ்.பி கவனிக்க வேண்டும்.

ஆனால் அத்தனை ஹை - அலர்ட் தரப்பட்டு செக்யூரிட்டிக்கு நாநூறு பேரைப் போட்டு நடத்தப்படும் பொதுக்கூட்டத்துக்கு அனுப்பப்பட்ட ஒரு சப் இன்ஸ் பெக்டர், சற்றும் பொறுப்பில்லாமல் ஒரு துண்டுச் சீட்டில் மாலை போடுகிறவர்கள் பெயர்களை மட்டும் கிறுக்கி வைத்திருந்தார்!. ஆயிரக்கணக்கான பேர் கலந்து கொள்ளும் ஒரு நிகழ்ச்சியில் முப்பது நாற்பது பேர் மாலையிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். சும்மா குப்புசாமி, கோவிந்தசாமி என்று பெயர்களை கிறுக்கி வைப்பதால் என்ன பயன்? பின்னால் பிரச்னை என்று வரும்போது யாரைத் தேடிப்போய் எப்படி விசாரிப்பது?



**அத்தனை உயர் பாதுகாப்புத் தரப்பட்டு, 'செக்யூரிட்டிக்கு' நானூறு பேரைப் போட்டு, நடத்தப்படும் பொதுக்கூட்டத்துக்கு அனுப்பப்பட்ட ஒரு சப் இன்ஸ்பெக்டர், மாலை போடுகின்றவர்களின் பட்டியலை எழுதி வைத்திருந்த லட்சனத்தை பின்னால் நாங்கள் பார்த்தபோது, அதிர்ச்சியின் உச்சத்துக்கே சென்றோம். ஆயிரக்கனக்கானோர் கலந்து கொள்ளும் ஒரு நிகழ்ச்சியில், முப்பது, நாற்பது பேர் மாலை போடுகிறார்கள். சும்மா குப்புசாமி, கோவிந்தசாமி என்று பெயர்களைக் கிறுக்கி வைத்தால் என்ன பயன்? பின்னால் பிரச்சனை வரும்போது யாரைத் தேடி எப்படி விசாரிப்பது? ஏதோ சொல்லி விட்டார்களே என்பதனால் கீழே கிடந்த குப்பைக் காகிதத்தில் நாலு பெயர்களைக் கிறுக்கி வைப்பதா?**

அப்புறம் பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்று பக்கம் பக்கமாக ஐ.பி. ரிப்போர்ட் அனுப்பி என்ன பிரயோஜனம்? மாநில போலீஸ் என்றில்லை. பொதுவாக அரசு இயந்திரம் செயல்படும் லட்சணம், பெரும்பாலும் இதுதான்! இங்கு மட்டுமல்ல, அநேகமாக தேசம் முழுவதுமே.

1984ம் வருடம் ஜுன் மாதம் 19ம் தேதி அன்று டெல்லியில் இன்டெலிஜென்ஸ் ப்யூரோ அதிகாரிகளின் உயர்மட்டக் கூட்டம் ஒன்றில் ஒரு விஷயம் பேசப்பட்டது. சீக்கியர்களால் இந்திரா காந்திக்கு ஏதாவது அபாயம் நேரலாம் என்று அந்தக் கூட்டத்தில் எச்சரிக்கை செய்தார்கள். இதைக் கேட்டதுமே கோபமுற்று மான்சிங் என்றொரு ஐ.பி.எஸ். ஆபீசர் வேலையை ராஜினாமா செய்து விட்டுப் போனார். பல சீக்கிய காவல்துறை அதிகாரிகளும் ஊழியர்களும் தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்யும் விதமாக டிபார்ட்மெண்டுக்குள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள்.

ஒருவாறு அதையெல்லாம், வெளியே தெரியாதவாறு அடக்கிவிட்டார்கள் என்றாலும் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மிக முக்கியமானதொரு முடிவு - இந்திரா காந்தி பாதுகாப்புக்கு இதுநாள்வரை நியமிக்கப்பட்டிருக்கும் அத்தனை சீக்கியர்களையும் உடனடியாகப் பணிமாற்றம் செய்ய வேண்டும் என்பது. அவரது வீடு, அலுவலகம் இரண்டு இடங்களிலும்.

அதன்படி இந்திரா காந்தி வீட்டில் இருந்த சீக்கியக் காவலர்களை இடம் மாற்றி உத்தரவுகள் அனுப்பப்பட்டுவிட்டன. பல்பீர் சிங் என்றொரு சப் இன்ஸ் பெக்டர் அப்போது அப்பணியில் இருந்தார். அவர் தனது பணிமாற்றம் உத்தரவை எடுத்துக் கொண்டு நேரே ஆர்.கே தவானிடம் சென்றார். 'எத்தனை நாளாக நான் இந்தப் பணியில் இருக்கிறேன்! மேடமுக்கு ஒரு கெடுதல் செய்ய நினைப்பேனா? இப்படி அசிங்கப்படுத்துகிறார்களே! நீங்களாவது கேட்கக் கூடாதா?' என்று முறையிட்டார்.

தவான் யோசித்தார். அடடா, அப்படியா உத்தரவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் பார்த்துக் கொள்கிறேன் என்று அந்த சப் இன்ஸ்பெக்டரை அனுப்பிவிட்டு, Put them all back என்று உத்தரவை திருத்த உத்தரவிட்டுவிட்டார்! தவானே எடுத்துச் சொன்னபடியால் இந்திரா காந்தியும் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டார்.

இத்தனைக்கும் 81ல் இந்திரா ஆட்சிக்கு வந்த சமயம் தவான் அத்தனை ஒன்றும் அவருக்கு நெருக்கமானவரில்லை. முன்பொரு காலத்தில் 1977க்கு முன்னர் தவானுக்கு இந்திரா குடும்பத்துடன் இருந்த நெருக்கத்துடன் ஒப்பிட்டால் இது ஒன்றுமே இல்லை என்று சொல்லிவிடலாம். உடனிருப்பவரின் விருப்பம் என்கிற அளவில் மட்டுமே இந்திரா தவானின் கருத்துக்கு அப்போது உடன்பட்டார்.

உளவுத்துறை உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் ஒரு விஷயம் பேசப்படுகிறது. உடனடி நடவடிக்கை கோரப்படுகிறது. உத்தரவும் அனுப்பப்படுகிறது. அதைப் பிரதமர் அலுவலகப் பிரமுகர் ஒருவர் மாற்றி அமைத்துவிட முடிகிறது!.

ஐ.பி. இயக்குநர் என்பவர் தினசரி பொழுது விடிந்ததும் பிரதமரை அவரது வீட்டில் சந்தித்துப் பேசக் கடமைப்பட்டவர். நேரடியாக அவர் இந்திராவிடம் பிரச்சனையை எடுத்துச் சொல்லி, சீக்கியர்களை மாற்றச் சொன்னதன் அவசியம் பற்றி விளக்கியிருக்க முடியாதா? ஏன் செய்யவில்லை? பின்னால் அதற்கு எத்தனை பெரிய விலை கொடுக்க வேண்டியதாகிப் போனது!

இந்தச் சமபவத்தை இங்கே நினைவுகூர்ந்ததன் காரணம், ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீபெரும்புதூரில் செய்த தவறைச் சுட்டிக்காட்டுவதற்காக. ஐ.பி. இயக்குநர் வரைக்கும் அதே வித மனோபாவம் தான் வேரோடியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக.

அலட்சியம். ஒவ்வொரு முறையும் அதற்கு நாம் கணிசமான விலை கொடுத்து வந்திருக்கிறோம்.

இந்திரா படுகொலைக்குப் பிறகு நியமிக்கப்பட்ட தாக்கர் கமிஷனில் தவான் மீது சந்தேகம் எழுப்பப்பட்டு இந்த விவகாரத்தை ஆராயச் சொல்லிக் கோரப்பட்டது. உண்மையில் தவான் உள்நோக்கம் ஏதுமின்றித்தான் சீக்கியக் காவலர்கள் இந்திராவின் பாதுகாப்புப் பணியில் தொடரலாம் என்று சொல்லியிருப்பார். பிரச்னையின் தீவிரத்தை உணராததும் உளவுத்துறையின் எச்சரிக்கையை மதிக்காததும்தான் அவர் செய்த பிழைகள்.

இதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். 1977 சமயத்தில் இந்திரா காந்திக்கு எதிரான வழக்குகளை ஜனதா அரசு ஒன்றன் பின் ஒன்றாக எங்களிடம் அனுப்பிவைத்துக் கொண்டிருந்த சமயத்தில், தவானை நான் சந்தித்திருக்கிறேன். இந்திராவுக்கு எதிராக அவர் அப்ரூவராக வாய்ப்பிருக்கிறதா என்று பார்ப்பதற்காக அந்தச் சந்திப்புகள் நிகழ்ந்தன.

'என்ன ஆனாலும் சரி. இந்திரா காந்தி எனக்கு என் தாயைப் போன்றவர். அவருக்கு எதிராகக் கனவிலும் என்னால் சாட்சி சொல்ல முடியாது' என்று சொல்லி விட்டவர் அவர். இந்திராவும் தன் மூத்த மகன் ராஜிவிடம் காட்டிய அன்பைத்தான் அவரிடமும் காட்டினார். ராஜிவும் தவானும் மிக நெருங்கிய தோழர்கள்.

ஆனால் ஐ.பி. சொன்னபடி சீக்கியக் காவலர்களால்தான் இந்திராவின் உயிர் பறிக்கப்பட்டது என்பதனால் தவானைக் குற்றவாளிகள் பட்டியலில் சேர்த்துவிட முடியாது. மீண்டும் அலட்சியம் மற்றும் உளவுத்துறையின் எச்சரிக்கையைப் புறக்கணித்த தவறுகள மட்டும்தான்!

ஸ்ரீபெரும்புதூர் சம்பவத்துக்கும் இதே காரணம்தான். அலட்சியம். பல மட்டங்களில், பலவிதமாக, பல்வேறு நபர்கள் காட்டிய அலட்சியம்.

பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலத்தமிழ்ப் பூங்கா – 5

# HENDON தமிழ்ப் பாடசாலை

சரோ சந்திரகோபால்






புலத் தமிழ்ப் பூங்காவின் ஐந்தாவது இதழை அலங்கரிக்கும் மலர் HENDON தமிழ்ப் பாடசாலை. 2002ம் ஆண்டில் HENDON HIGH SCHOOL இல், ஆறு வகுப்புக்களைத் தமதாக்கி, 23 மாணவர்கள் பத்து ஆசிரியர்களுடன் உதயமாகியது இப்பாடசாலை. தலைமை ஆசிரியர் இல்லாமல், நிர்வாகக் குழுவினர் ஆளுமையின் கீழ் தரமாக இயங்கும் இப்பாடசாலை, பிரித்தானியாவில் ''தலை இன்றித் தலை நிமிர்ந்து தமிழ் வளர்க்கும் ஒரே பாடசாலை'' என்று பெருமையுடன் கூறிக் கொள்கின்றனர் நிர்வாகக் குழு அங்கத்தவர்கள்.

மாணவர்களின் எண்ணிக்கையின் துரித வளர்ச்சியைத் தொடர்ந்து, HENDON, SHALDON ROAD இல் உள்ள EDGEWERE, CANNON HIGH SCHOOL இற்கு 2005ம் ஆண்டில் இடம் மாறிய இப்பாடசாலை- இன்று 20 வகுப்பறைகளில் 20 ஆசிரியர்களுடனும் 250 மாணவ மாணவிகளுடனும் வெற்றி நடை போடுகின்றது. 10 வருடங்களில் பள்ளியின் இப்பெரு வளர்ச்சி, நிர்வாகக் குழுவினருக்குக் கிடைத்த மகத்தான வெற்றி.

வாரந்தோறும் சனிக்கிழமைகளில், காலை 9 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நடைபெறும் இப்பாடசாலை 9.30 மணி முதல் 10.15 மணி வரை மாணவர், ஆசிரியர் ஒன்று கூடலுடன் ஆரம்பாகின்றது. 10.15 மணி முதல் 12.15 மணி வரையிலான நேரம், தமிழ்மொழி வகுப்புகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து பரதம், சங்கீதம், புல்லாங்குழல், வீணை, மிருதங்கம், வயலின் ஆகிய கலை வகுப்புகளும் இடம் பெறுகின்றன.

பாடசாலையின் ஒவ்வொரு தவணை முடிவிலும், தொடர்ந்து மூன்று நாட்கள் பாடசாலைக்கான மாணவர் அனுமதி வழங்குவதற்கான நாட்களாக ஒதுக்கப் பட்டுள்ளது. சிறுவர் வளர்நிலை வகுப்புக்கான அனுமதி வயது ஐந்தாக உள்ளது.

இத்துடன் 11 +, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. விசேஷமாக ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இருந்து குடிபெயர்ந்து வந்த தமிழ் மாணவர்களின் ஆங்கில அறிவு வளர்ச்சியிலும் இவ்வகுப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இங்கு ஈழத்து மாணவர் மட்டுமன்றி, இந்திய, மலேசியத் தமிழ் மாணவர்களும் கல்வி பயில்கின்றனர். உலகத் தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவை, வருடந்தோறும் புரட்டாசி மாதத்தில் நடாத்தும் ஆசிரியர் பயிற்சிப் பட்டறைகளில் இப்பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் தவறாது, இலவசமாக பயிற்சி பெறும் வசதியை இப்பள்ளி நிர்வாகம் ஒழுங்கு செய்து வருகின்றது.

ஆரம்ப வகுப்பான சிறுவர் வளர்நிலையில் பேசுதல், கேட்டல், பாடல், அபிநயம், என்ற வழியில் தமிழ்மொழி அறிமுகம் ஆரம்பமாகின்றது. வளர்நிலை ஒன்று முதல் பாடத்திட்டப்படி படிப்பித்தல் தொடர்கின்றது. மாணவர்கள் பேச்சுத் தமிழை விருத்தி செய்யும் நோக்கில், மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து (Group work) தமிழில் பேசக் கூடிய வாய்ப்பு இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமது வயதை ஒத்த இளையோர்களோடு, ஒன்றாகக் கூடி இருந்து தமிழில் பேசும் போது, கூச்சம் இன்றி சுவாரஸ்யமாகவும், சந்தோஷமாகவும் மொழியைப் பேசிப் பழகும் ஆர்வம் மாணவர்களுக்கு ஏற்படுகின்றது. தவிர, இம் மாணவர்கள் இருமொழிகளில் பேசுவதால், ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்த, ஆங்கில அறிவு குறைந்த மாணவர்களும் மிகவும் எளிதாகப் பேசிப் பழக முடிகிறது.

மாணவர்களின் தமிழ் அறிவு ஒவ்வொரு தவணையும் பரீட்சிக்கப்பட்டு வகுப்பேற்றம் நடைபெறுகின்றது. மாணவர்கள் CAMBRIDGE கல்விப் பொதுத் தராதர சாதாரண உயர்தர வகுப்புப் பரீட்சைகளுக்குத் தோற்றி, மிகத் திறமையாகச் சித்தி பெறுகின்றனர். இம்மாணவர்கள் வளர்நிலைப் பரீட்சைகளுக்கும் தவறாது தோற்றுகிறார்கள். முன்பெல்லாம் பரீட்சை எழுதுவதற்காக மாணவர்கள் வெவ்வேறு பரீட்சை நிலையங்களைத் தேடிப்போக வேண்டியிருந்தது. கடந்த இரண்டு வருடங்களாக, இந்நிலை மாறி, HENDON தமிழ்ப் பாடசாலையிலேயே மாணவர்கள் பரீட்சை எழுதுவதோடு, வேறு பாடசாலை மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற இங்கு வருகிறார்கள். கிட்டத்தட்ட 200 மாணவர்கள் இங்கு பரீட்சை எழுதக் கூடிய இடவசதி இப்பாடசாலையில் உள்ளது. கலை வகுப்புகளில் பயிலும் மாணவர்கள், தமக்கு விருப்பமான பரீட்சை எடுக்கக்கூடிய சுதந்திரமும் இப்பாடசாலையில் உள்ளது.

ஒவ்வொரு வருடமும் சிறந்த மாணவன் / மாணவிக்கான பரிசு ஒரு மாணவருக்குக் கிடைக்கின்றது. தமிழ் எழுத்துப் பரீட்சை, திருக்குறள், பேச்சு, விளையாட்டுப் போட்டி போன்ற அனைத்துப் போட்டிகளினதும் பெறுபேறுகள் அடிப்படையில் புள்ளிகள் கொடுக்கப்பட்டு, அதிகூடிய புள்ளிகள் பெறுபவர் சிறந்த மாணவருக்கான பரிசைத் தட்டிக் கொள்கின்றார். பாடசாலை ஆண்டு விழாவில் பள்ளியில் பயிலும் அத்தனை மாணவர்களும் ஏதோ ஒரு வகையில் பங்கெடுக்கின்றார்கள். கடந்த ஆண்டு விழாவில் மாணவர்கள் பங்கேற்று நடித்த, 'நக்கீரன் சபதம்' என்ற நாடகம் பார்வையாளர்களைப் பெருமளவில் ஈர்த்ததாயும் இதே நாடகம் ஈலிங் அம்மன் கோயிலில் அரங்கேறியபோது கிடைத்த வரவேற்பு, புகழ்ச்சி கண்டு பிள்ளைகளின் பெற்றோர் அகமகிழ்ந்தனர். பங்கு பற்றிய மாணவர்களைப் புகழ்வதா? பயிற்சி கொடுத்த ஆசிரியர்களைப் பாராட்டுவதா? தமிழ் அன்னைக்கு தமிழ் குழந்தைகள் கொடுக்கும் கௌரவமெனக் கூறி மகிழ்கின்றது, பள்ளி நிர்வாகக் குழு.

''காலை எழுந்தவுடன் படிப்பு, மாலை முழுவதும் விளையாட்டு'' என்ற பாரதி அடிகளுக்கேற்ப, படிப்போடு விளையாட்டுப் போட்டிகளிலும் மாணவர்களை ஈடுபடுத்து கின்றது இப்பாடசாலை. இவையனைத்திற்கும் மேலாக பள்ளி நிர்வாகம் பெருமையுடன் கூறும் விடயம், இங்கு நிகழும் வருடாந்த திருக்குறள், பேச்சுப் போட்டிகள். போட்டி நடக்கும் வேளைகளில், இப்பாடசாலையில் எதுவித சம்பந்தமும் இல்லாத புதியவர்களையே நடுவர்களாக அமர்த்துகின்றார்கள். பக்கச்சார்பு, பாரபட்சம், மனத்தாங்கல் எதுவுமின்றி, நியாயமான பெறுபேறுகளை மாணவர்கள் பெற இம்முறை ஏதுவாகின்றது.

### 'கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி' தமிழ் குடி!.

மூத்த மொழிகளுக்கு எல்லாம் முதன் மொழி தமிழ் மொழி என்பது ஆதார பூர்வமான உண்மை. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்து, வளர்த்த பெருமைக்குரிய மொழியின் சொந்தங்கள் நாங்கள். ஒரு மனிதனின் பிறப்புக்கும், அவனது தாய் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அந்த நெருக்கமே மாறுபட்ட கலாச்சார பண்பாட்டுச் சூழலில் வாழும் நம் குழந்தைகளுக்கு அவர்களது எதிர்கால வாழ்வில் தாய் மொழியின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

உரையாடலுக்கு முற்றிட்டுக் கேள்வி கேட்கத் தொடங்கியது புலத்தமிழ்ப் பூங்கா.

**''புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழ்க் குழந்தைகள் தாய் மொழி அறிவுடையவர்களாக வளர வேண்டுமென்பதில் தமிழ் உணர்வுள்ள எல்லாத் தமிழர்களுக்கும் உடன்பாடு உண்டு. ஆனால் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்று அதே மொழியில் எதிர்காலப் பணிகளில் ஈடுபடப் போகும் நமது குழந்தைகளுக்கு அவர்களது முன்னேற்றத்திற்கு தமிழ் மொழி பயன்படுமா? எந்த வகையில்?''**

'நிச்சயமாகப் பயன்படும்' எனத் தொடங்கி ஆணித்தரமான பதில் தொடர்ந்தது. எந்த மொழி பேசினாலும் சொந்தமொழி தான் எதற்கும் முந்திய மொழி. நம் நாட்டுக் கலாச்சாரம், பண்பாடு இவற்றையும் நம் குழந்தைகள் தொலைத்து விடாது, வெளிநாட்டவர்களாக வாழாது. வெளிநாட்டில் தமிழர்களாக வாழவும் மொழி அறிவு வேண்டும். நமது விழுமியங்களை, நம் தாயக நிலையினை வெளிநாட்டவருக்கும் விளக்க, தாய்மொழி அறிவு தேவை. நம் பிள்ளைகள் எந்த ஒரு நேர்முகப் பரீட்சைக்குப் போனாலும் 'EXTRA CURRICULAR ACTIVITIES' பற்றி கேள்வி உள்ளது. தவிர இந்நாட்டில் பெருகி வரும் சனத்தொகையில் மொழிபெயர்ப்புக்கு என்றே எவ்வளவோ பவுண்கள் செலவழிக்கப்படுகின்றன. இங்கு தாய்மொழி அறிவு நிச்சயமாக பிரயோசனப்படலாம். அதே நேரத்தில் நம் இளையோர் பட்டப்படிப்பு முடித்து. தொழில் என்று வரும் போது, நம் தாய் மொழியைப் பயன்படுத்தக் கூடிய பல வாய்ப்புகள் நிச்சயமாக ஏற்படும். (ஆங்கிலம் பேசத் தெரியாத ஒரு தமிழ்ப் பெரியவர் தனது உடல் நலமின்மை பற்றி, ஒரு இளைய தலைமுறையினரைச் சேர்ந்த, தமிழ் பேசத் தெரிந்த ஒரு இளம் மருத்துவரைச் சந்திக்கும் போது ஏற்படும் மன மகிழ்வை நினைப்பூட்டியது இப்பதில்)

**எம் இரண்டாவது வினா பள்ளியின் தனித்துவம் பற்றியதாக இருந்தது. பதில் மூன்று பிரிவுகளாக இருந்தது.**

- எம் பள்ளி நிர்வாகக் குழு அங்கத்தவர்கட்கு இடையில் உள்ள பரந்த மனப்பான்மை, ஒருவர் சொல்வதை மற்றவர் மதிக்கும் பண்பு, எதிலும் ஏகோபித்த முடிவெடுக்கும் கொள்கை.
- எம் பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையிலுள்ள புரித்துணர்வு, அன்பாக நண்பர்களாகப் பழகும் முறை.
- மாணவர் சம்பந்தப்பட்ட எந்த விடயத்திலும் நாம் கடைப்பிடிக்கும் பக்கச் சார்பற்ற நிலையான கொள்கை.

தலைமை ஆசிரியர் இல்லாத நிலையில்,

13ம் பக்கம் பார்க்க








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக கலை இலக்கியவாதி அந்தனி ஜீவா

என்.செல்வராஜா
(நூலகவியலாளர், லண்டன்)

நூற்றாண்டுப் பழமை மிக்க மலையகத்தின் கலை இலக்கியத்துக்கு உயிர் கொடுத்த கலை, இலக்கியவாதிகளுள் அந்தனி ஜீவா குறிப்பிடத்தகுந்தவர். 50 ஆண்டுக் காலமாக இவரது கலை, இலக்கியப்பணி ஆங்காங்கே தாயகத்திலும் தமிழகத்திலும் பதிவாகி வந்து கொண்டிருக்கின்றன.

இளவயதில் பத்திரிகைத்துறையில் இவர் கொண்ட ஈடுபாடு பின்னாளில், இலங்கை சமசமாஜக் கட்சி வெளியிட்ட ஜனசக்தியிலும், அதைத் தொடர்ந்து மலையகத்தின் சிறு சஞ்சிகைகளாக மலர்ந்த தேசபக்தன், குன்றின் குரல், கொழுந்து ஆகியவற்றிலும் ஆசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தது. கலையையும் இலக்கியத்தையும் வெறும் பொழுது போக்குக்காகவன்றி, சமூக விழிப்புணர்வுக்கான ஊடகமாகக் கருதித் தன் பணியை ஆற்றும் இவர் பத்திரிகை ஆசிரியராகத் தன் மலையக இலக்கிய வாழ்வினுள் பிரவேசித்த போதிலும், கட்டுரை ஆசிரியராக, சிறுகதை எழுத்தாளராக, நாடகாசிரியராக, நாடக இயக்குநராக, தேசியப் பத்திரிகைகளின் பத்தி எழுத்தாளராக, நூல் வெளியீட்டாளராக என்றெல்லாம் பன்முகப்பட்ட பங்களிப்பினை இன்றுவரை வழங்கி வருகின்றார்.

பத்தி எழுத்துக்களைப் பொறுத்தவரையில், தினகரனில் இவர் எழுதிய நினைத்துப் பார்க்கிறேன், படித்ததும் பார்த்ததும் கேட்டதும், பார்வையின் பதிவுகள் ஆகிய பத்தி எழுத்துக்களும் பிரபல்யமானவை.

மலையகத்தின் இலக்கிய வளர்ச்சிக்காகவும், மலையக எழுத்தாளர்களின் நலன் பேணவும் என உருவான மலையக கலை இலக்கியப் பேரவையின் செயலாளராகவும் அந்தனி ஜீவா பணியாற்றியுள்ளார். கண்டியிலிருந்து இவர் இயக்கும் மலையக வெளியீட்டகம் என்ற நூல்வெளியீட்டு நிறுவனத்தின் மூலமும் பல நூல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

1978ம் ஆண்டில் தமிழ்நாட்டில் திருப்பூரில் நடைபெற்ற கலை - இலக்கிய பெருமன்ற மகாநாட்டில் கலந்து கொண்டு இவர் நிகழ்த்திய ஆய்வுரை ஈழத்தில் தமிழ் நாடகம் என்ற பெயரில் தமிழ்நாட்டிலிருந்து சிவகங்கை, அகரம் வெளியீடாக 1981இல் நூலுருவில் வெளிவந்திருந்தது. அன்னை இந்திரா என்ற இவரது அடுத்த நூல், கல்ஹின்னை தமிழ் மன்றத்தின் மூலம், அதன் 25ஆவது வெளியீடாக, கண்டியிலிருந்து எஸ்.எம்.ஹனீபா அவர்களால் 1985 மே மாதத்தில் வெளியிடப்பட்டது. காந்தி நடேசையர் என்ற மற்றொரு நூலை கண்டி, மலையக வெளியீட்டகம், நவம்பர் 1990இல் வெளியிட்டிருந்தது. மலையகமும்




இலக்கியமும் என்ற நூல் நவம்பர் 1995இல் வெளியிடப்பட்டது. இந்த நூல் 1996இல் அரசகரும் மொழித் திணைக்களத்தினரும் நடத்திய தமிழ்த் தின விழாவில் அரச இலக்கிய விருது பெற்றது. சி.வி. சில நினைவுகள் என்ற மற்றொரு நூலில் அந்தனி ஜீவா அவர்கள் சி.வி.வேலுப்பிள்ளையின் வாழ்வும் பணியும் பற்றித் தன் குறிப்புகளை 2002 இல் பதிவு செய்துள்ளார். இவரது மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு என்ற நூல் மலையக வெளியீட்டகத்தினால் ஒக்டோபர் 2002 இல் வெளியிடப்பட்டது. மலையகம் வளர்த்த கவிதை என்ற நூல் டிசம்பர் 2002 இல் வெளியிடப்பட்டது. கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள் என்ற நூல் அந்தனி ஜீவாவை தொகுப்பாசிரியராகக் கொண்டு கண்டி, மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா வெளியீடாக 2002 இல் 250 பக்கங்களுடன் வெளியிடப்பட்டது. அந்தனிஜீவா 2000ம் ஆண்டு சர்வதேச பெண்கள் தினத்தில் 12 பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து குறிஞ்சி மலர்கள் என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டிருந்தார். பின்னர் 2004 இல் அம்மா என்ற தலைப்பில் 25 இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் தொகுக்கப்பெற்று, உலக மகளிர் தினத்தை முன்னிட்டு திசைகள் அமைப்பின் ஏற்பாட்டில் சென்னை கலைஞன் பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டிருந்தது.

மலையக மாணிக்கங்கள் அந்தனி ஜீவாவின் குறிப்பிடத்தகுந்தொரு நூலாகும். கொழும்பிலிருந்து துரைவி வெளியீடாக செப்டெம்பர் 1998 இல் இந்நூல் வெளிவந்துள்ளது. மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த முன்னோடிகளில் பன்னிருவரைப் பற்றிய தகவல்களைத் தரும் நூல் இதுவாகும். புதிய வார்ப்புகள் என்ற வரிசையில் இளைய தலைமுறை எழுத்தாளர்களையும் பெண் பிரம்மாக்கள் என்ற தலைப்பில் பெண் படைப்பாளர்களையும் பத்திரிகைகளில் அறிமுகப் படுத்தியவர் அந்தனி ஜீவா. பின்னாளில் 1997இல் முகமும் முகவரியும் என்ற தொகுப்பு நூலின் மூலம் மலையக எழுத்தாளர்களின் விபரத் திரட்டினையும் இவர் வெளியிட்டிருந்தார். இதில் நாவல் நகர் கே.பொன்னுத்துரையின் உதவியுடன் 1991 முதல் சேகரித்த விபரங்களுடன் மத்திய மாகாண இந்து கலாச்சார கல்வி அமைச்சு சேகரித்த விபரங்களையும் சேர்த்து மொத்தம் 68 எழுத்தாளர்களின் விபரங்களை முகமும் முகவரியும் நூலின் முதலாவது தொகுப்பில் பதிவு செய்திருக்கிறார். எழுத்தாளர்களின் பெயர், புனைபெயர்கள், தொழில், பிறந்த திகதி, பிறந்த மாவட்டம், எழுதி வெளிவந்த நூல்கள், எழுதிய முக்கிய படைப்பு, சிறு குறிப்பு, முகவரி என்பன ஒவ்வொரு பதிவிலும் இடம்பெற்றுள்ளன.

உலக அரங்கில் பரந்து வாழும் ஈழத் தமிழர்களுக்கு இடையே இலக்கியப் பாலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். சில மாதங்களுக்கு முன் ஜனாதிபதியை தமிழ்-சிங்கள எழுத்தாளர் தூதுக்குழு சந்திப்பு நடந்தது. பத்மா சோமாகாந்தன், தெளிவத்தை ஜோசெப், மேமன் கவி, திக்குவல்லை கமால், ரவி ரத்தினவேலு, அரியநாதன், எம்.எச்.டி.பத்மநாதன் ஆகியோருடன் அந்தனி ஜீவாவும் அலரிமாளிகையில் சந்தித்தார். எழுத்தாளர்கள் தமது நூல்களை ஜனாதிபதியிடம் கொடுத்தார்கள். ஆனால், அந்தனி ஜீவா, லண்டனிலிருந்து நூலகவியலாளர் தொகுத்து வரும் ஈழத்தமிழரின் நூல் விபரப்பட்டியலை ஜனாதிபதியிடம் கையளித்தார். இவரது கையளிப்பும், நூல் தேட்டம் பற்றிய ஜனாதிபதியின் கருத்தும் ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. இந்தச் சம்பவம், அந்தனி ஜீவாவின் பரந்த எல்லைகளை உணர்த்துகிறது. அந்தனி ஜீவா ஞாயிறு தினக்குரலில் பார்வையின் பதிவுகள் என்ற தலைப்பில் கடந்த இரு வருடங்களாக எழுதிவந்த பத்தி எழுத்துக்களில் தேர்ந்த 40 பதிவுகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. உலகளாவியரீதியில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் மேற்கொள்ளும் நல்ல இலக்கிய முயற்சிகளை இலங்கை வாசகர்களுக்கு மீள் அறிமுகப்படுத்துவதாக இவை அமைந்துள்ளன. கொழும்பு எஸ்.கொடகே சகோதரர்களின் வெளியீடாக இந்நூல் செப்டெம்பர் 2010 இல் வெளிவந்திருக்கிறது. சமகாலப்பகுதியில் தமிழகத்தில் மற்றுமொரு நூலையும் அந்தனி ஜீவா வெளியிட்டிருக்கிறார். "அமைதி கோர்ட் நடந்து கொண்டிருக்கிறது" என்ற தலைப்பில் சென்னை நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (என்.சி.பி.எச்) இவரது மற்றுமொரு நூலை செப்டெம்பர் 2010இல் வெளியிட்டிருக்கிறது.

ஞாயிறு தினக்குரலில் பார்வையின் பதிவுகள் என்ற தலைப்பில் கடந்த இரு வருடங்களாக எழுதிவந்ததாக முன்னர் குறிப்பிட்ட பத்தி எழுத்துக்களில் தேர்ந்த 31 பதிவுகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கூர்ந்து கவனித்தால் இவ்விரு நூல்களும் பார்வையின் பதிவுகள் என்ற இவரது பத்தி எழுத்துக்களின் இரு வேறு தொகுப்புகளே. சில பதிவுகள் இரண்டு நூல்களிலும் இடம்பெறும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளன. அந்தனி ஜீவாவின் பத்தி எழுத்துக்களின் ஒரு தொகுப்பு தமிழக வாசகர்களை மனதில் இருத்தி அவர்களும் அறிய வேண்டும் என்று கருதி 31 ஈழத்தவரின் பதிவுகளுடன் இந்தியப் பதிப்பாகவும், மற்றைய தொகுப்பு, ஈழத்தமிழர்கள் வரலாற்றுப் பதிவாக கணிப்பிட வேண்டும் என இவர் கருதிய ஈழத்தவர் பற்றிய 40 பதிவுகளை பார்வையின் பதிவுகள் என்ற தலைப்பில் இலங்கைப் பதிப்பிலும் வெளியிட்டிருக்கிறார் என்று உணர முடிகின்றது.

மலையகப் படைப்பாளியாக உருவாகி வளர்ந்த அந்தனி ஜீவா அவர்கள் இன்று உலகத்தமிழ் படைப்பாளிகளின் இலக்கியத்தூதுவனாகப் பரிணமித்து எமது இலக்கியவாதிகளின் பெருமுயற்சிகள் குடத்துள் விளக்காக இருந்து விடக்கூடாது என்ற பொதுநலச் சிந்தையுடன் செயலாற்றி வருகின்றார். அவரது பணிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டிய பொறுப்பு புலம்பெயர் இலக்கியவாதிகளுக்கும் உண்டு. ●

# கேள்வியின் நாயகி

1ம் பக்கத் தொடர்ச்சி

முன்பாக சாட்சியமளிக்க முன்வந்த பொது மக்கள் தடுக்கப்பட்டனர். ஆனாலும் இந்த அம்மையார், மக்கள் பிரதிநிதி போன்று பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் கடலட்டை பிடிப்பதற்கு 400 சிங்களவர்கள் வருகை தந்துள்ள விடயம் அரச அதிபருக்கு தெரியாது.

புகையிரத நிலையத்தில் தங்கியிருக்கும் சிங்களக் குடியேற்றவாசிகள், கொழும்புத் துறையிலும் மணியம் தோட்டத்திலும் தமது பூர்வீக நிலங்களைத் தேடுவதுபோல் நடிப்பதும் இவருக்கு புரியாது.

வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களை, கோத்தாவின் உத்தரவின் பேரில், கட்டளைத் தளபதி சவேந்திரா சில்வா சுட்டுக் கொன்றாரென, பழைய ஜெனரல் சரத் பொன்சேக்கா தெரிவித்த செய்தியை வைத்து, கொழும்பில் வழக்கொன்று நடைபெறுகிறது.

இராணுவம் இவர்களைச் சுட்டுக் கொல்லவில்லையென தலையில் அடித்துச் சத்தியம் செய்யும் திருமதி. இமெல்டா சுகுமாரை அரசு தரப்பு சாட்சியமாக, உயர்நீதிமன்றத்தில் நிறுத்தினால் பொருத்தமாகவிருக்கும்.

இனப் படுகொலையை தலைமை தாங்கி நடாத்திய சரத் பொன்சேக்காவே, சரணடைந்தவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டதாக கூறும்போது, யாழ் அரச அதிபருக்கு, இதனை மறுக்கும் நிர்ப்பந்தம் ஏன் வந்தது?

இதிலிருந்து ஒருவிடயம் மட்டும் தெளிவாக விளங்குகிறது.

இலங்கை அரசால் நடாத்தப்படும் நல்லிணக்க ஆலோசனைக் குழுவோ அல்லது விசாரணைக் குழுவோ தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுத் தராது.

ஜீ. எல். பீரிஸ் கலந்து கொண்ட இலண்டன் மாநாட்டில், சாட்சிகளின் பாதுகாப்புப் பொறிமுறை குறித்து, அனைத்துலக மன்னிப்புச் சபை பிரதிநிதி ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது.

நீ யார் எமக்கு நிபந்தனை விதிப்பது என்று கொதித்தெழுந்தார் சட்டக்கலை நிபுணர் ஜீ.எல். பீரிஸ்.

இந்த இலட்சணத்தில், சிங்கள தேசம் நடாத்தும் படுகொலை மறைப்பு நாடகத்தை தமிழ் மக்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள்?

கொலை செய்தவரே, நீதிபதியாக மாறி, தீர்ப்புச் சொல்ல முனையும் கூத்து எங்கே நடைபெறுகிறது?

இது சிங்கள[illegible] என [illegible] பத்திரிகைக்கு பேட்டி அளித்த ஜெனரல், இன்று சிங்களத்தின் வெலிக்கடைச் சிறையில் தேநீர் இன்றி நாவறண்டு வாடுகின்றார்.

சிறுபான்மை இனமென்று ஒன்று இல்லையென கொச்சைத் தமிழில் பேசிய மகிந்தர், தேசிய இன நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கியுள்ளார். கன்னியா வெந்நீர் ஊற்றில் புத்தரின் தலையைத் தேடுகிறது சிங்களம்.

புதைத்து வைத்து எடுத்தாலும் தட்டிக் கேட்க ஆளில்லை.

2000 ஆண்டுகளிற்கு முன்னரே, இந்த பௌத்த சின்னங்கள் இருந்ததை தான் கேள்விப்பட்டதாக இமெல்டா சுகுமாரும் தாளம் போடுவார், போலிருக்கிறது.

இரட்சகர்களின் அருமை பெருமையெல்லாம் இனிமேல் தான் பலருக்குப் புரியப் போகிறது.

தாயக விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த ஆயிரமாயிரம் மாவீரர்களை நினைவு கொள்ளும் இம்மாதத்தில், பாதைகளைச் செப்பனிட்டு இலக்கு நோக்கி விரைவாகப் பயணிப்போம்.

[illegible] இயற்கை, எழாமல் இருப்பது [illegible] ●

## மட்டு. மாணவி உக்ரைனில் தற்கொலை



உக்ரைன் லுகான்ஸ்க் மருத்துவ பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு கற்றுவந்த மருத்துவபீட மாணவியொருவர் சமீபத்தில் மாலை 20.30 மணியளவில் பல்கணியிலிருந்து விழுந்து மரணமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு கல்லடிப் பகுதியைச் சேர்ந்த சத்தியா வாமதேவன் (வயது 22) என்பவர் தனது கணவருடன் உக்ரைனில் கல்வி கற்று வந்துள்ளார். இது தவறுதலான விபத்தா அல்லது தற்கொலையா, என்பது தொடர்பில் லுகான்ஸ் காவல்துறையினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

விசாரணையின் பின்னர் இது தற்கொலை என லுகான்ஸ்க் காவல் துறையினர் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களுக்கு எல்லாம் ஒரு அதிபர்!


● வ.இ.இராமநாதன்

இவ் ஆண்டில் தனது நூற்றாண்டு விழாவை மிக பெருமையுடனும், விமரிசையாகவும் உலகின் பல நாடுகளிலும் கொண்டாடிக் கொண்டிருக்கும் தெல்லிப்பழை அம்பனை மகாஜனக் கல்லூரியின் புகழ் மிக்க விஞ்ஞான ஆசிரியராகவும் தலைசிறந்த அதிபராகவும் விளங்கும் அறிஞர் திரு.பொ.கனகசபாபதி மாஸ்டர் அவர்கள் இவ் ஆண்டில் பவளவிழாக் காண்கிறார் என்பதை எண்ணி மகாஜன கல்லூரியில் படித்த, அவரிடம் கல்வி பயின்ற மாணவர் சமுதாயம் பெரு மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றோம்.

மகாஜன கல்லூரியின் வெள்ளி விழா ஆண்டான 1935 இல் பிறந்து அக் கல்லூரியில் 1957 இல் ஆசிரியராக பதவியேற்று அப் பாடசாலையில் 1975இல் இருந்து 5 ஆண்டுகள் அதிபராக கடமை புரிந்த காலம் மகாஜனக் கல்லூரியின் வரலாற்றில் ஒரு பொற்காலம் என அக் கல்லூரியில் அக் காலப்பகுதியில் கல்வி பயின்ற மாணவ சமுதாயம் இன்றும் கூறிப் பெருமைப்படுகின்றார்கள்.

மகாஜனக் கல்லூரியில் 1957 ஆம் ஆண்டு ஆசிரியராக பணிபுரியத் தொடங்கிய காலம் தொடக்கம் கடந்த ஐந்து சகாப்தங்களுக்கு மேலாக இன்று 2010 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து 53 வருடங்கள் இன்றும் இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களின் கௌரவ அனைத்துலக ஒருங்கிணைப்பாளராக பணியாற்றிவரும் எம் அதிபர் மகாஜனக் கல்லூரியின் வரலாற்றில் ஒரு தொடர்கதை, ஒரு அத்தியாயம்.

ஈழத்தமிழர் கல்வி வளர்ச்சியின் வரலாற்றில் இவருக்கு தனி அத்தியாயம் ஒன்று உண்டு. ஈழத்தில் அவர் ஆசிரிய பணி, அதிபர் பணி புரிந்த பாடசாலைகளில் அடுத்து எனது நினைவிற்கு வருவது புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி. இக்கல்லூரியில் அவர் அதிபராக இருந்து ஆற்றிய பணிகள் அக்கல்லூரியின் அன்றைய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது என்பதையும் அவருடைய சேவைக்காலம் அக்கல்லூரியின் வரலாற்றில் என்றும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு இருக்கும் என இலண்டனில் உள்ள அக்கல்லூரியின் பழைய மாணவர்கள் பல முறை புகழ்ந்து பாராட்டுவதை யான் கேட்டு மகிழ்வுற்றிருக்கின்றேன்.



கனடா விழாவில் அதிபரை போற்றுகிறார் வி.ஆர்.இராமநாதன்



அதிபர் கனகசபாபதியை வி.ஆர்.கௌரவிக்கிறார்

மகாஜனக் கல்லூரியின் ஆசிரியராக, அதிபராக, கடமையாற்றிய போது அக் கல்லூரியின் வளர்ச்சிக்கு எவ்வளவு அக்கறையுடன் பணி புரிந்தாரோ அதே போல் உலகின் பல நாடுகளில் செயற்பட்டு வரும் அதன் பழைய மாணவர் சங்கங்களின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளராகவும், பிரதம ஆலோசகராகவும், முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கி வருகின்றார். அவரின் நற்செயல்களை போற்றுகின்றோம், அதற்கு தலை வணங்குகின்றோம்.

தாம் வாழும் போது மற்றவர்களையும் வாழ வைத்து சமுதாய வழிகாட்டியாக வாழ்வோர் சிலரே. அந்த வரிசையில் கல்விப் பணி, எழுத்துப்பணி, பொதுப்பணி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு நல்ல ஆசானாக, நல்ல வழிகாட்டியாக, நல்ல நண்பனாக தான் சார்ந்த சமுதாயத்திற்கு கடந்த 53 வருடங்களாக ஐந்து சகாப்தங்களுக்கு மேலாக சேவை ஆற்றி வரும் ஒரு பேரறிஞருடன் சம காலத்தில் யாமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதும் அவருடன் யாமும் பழகச் சந்தர்ப்பம் கிடைத்தமை என்பதும் எமக்கு பெருமை சேர்ப்பனவாகும்.

எவரொருவர் தமது வீடு, குடும்பம், சுற்றம் என்ற குறுகிய வட்டத்திற்கு வெளியே வந்து பிரதிபலன் கருதாது சமுதாயத்திற்கும், மக்களுக்கும் சேவை புரிகின்றாரோ, அவரது சேவை கௌரவத்திற்குரியது. அவர் கௌரவிக்கப்பட வேண்டியவர் என்ற கோட்பாட்டிற்கு இணங்க கடந்த 24.10.2010 இல் கனடாவில் அதிபருக்கு அவது நண்பர்கள் ஒரு விழாக்குழு அமைத்து அவரது பவள விழாவை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்து மிகவும் விமரிசையாகவும், நேர்த்தியாகவும் கொண்டாடி மகிழ்ந்தார்கள். அவ்விழாவில் அடியேனும் பிரதம விருந்தினராக கலந்து அவரை வாழ்த்தி வணங்கும் பாக்கியம் கிடைத்தமை எனது வாழ்வில் கிடைத்த மிகப் பெரிய பேறாக கருதுகின்றேன். மகாஜனக் கல்லூரியின் பொன் விழா, வைர விழா, பவள விழா, தற்போது நடைபெறும் நூற்றாண்டு விழா ஆகிய நான்கு விழாக்களிலும் கலந்து கொள்ளும் பாக்கியம் பெற்ற ஒரே ஒரு அதிபராக இவர் விளங்குகின்றார். அவரிடம் கல்வி பயின்ற மாணவர் என்ற வரிசையில் கடந்த 53 வருடங்களாக அவருடன் உள்ள தொடர்பை எண்ணி பெருமிதம் அடைகின்றேன்.

இன்று கனடாவில் மாத்திரம் அல்லாது உலகெங்கும் 'அதிபர்' என்ற சொல்லிற்கு இலக்கணம் அமைத்து வாழ்ந்து வரும் எமது மதிப்பிற்குரிய திரு. பொ.கனக சபாபதி அவர்கள் "அதிபர்களுக்கு எல்லாம் ஒரு அதிபர்". ●

## ஜீவா அருளனின் வேணுகான இசை



கடந்த செப்டம்பர் மாதம் 25ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இலண்டன் கின்லிவுட் பாடசாலை மண்டபத்தில் இலண்டனின் பிரபல சங்கீத வித்தகியான திருமதி. கமலா பத்மநாதன் அவர்களின் மாணவன், செல்வன் ஜீவா அருளன் அவர்கள் தனது வேணுகான இசையை அரங்கேற்றம் செய்தார். அவரின் அரங்கேற்ற விழாவுக்கு பிரதம விருந்தினராக வீணை வித்தகி செந்தில்செல்வி .வமானந்தன் அவர்கள் அழைக்கப்பட்டு இருந்ததோடு, சிறப்பு விருந்தினர்களாக பிரபல ஆய்வாளரான திருவாளர் யோசப் பற்றிமாகரன் அவர்களும், கவிஞர் கந்தையா இராஜ மனோகரன் அவர்களும், இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. வி.எஸ். வர்மானந்தம் அவர்களும் சிறப்புரைகள் ஆற்றினர். விழா தொடர்கையில் செல்வன் ஜீவா அருளன் அவர்களின் வேணுகான இசைக்கு மெருகூட்டுவது போல் மிருதங்க வித்துவான் ஆர்.ஆர். பிரதாப் அவர்களும், வயலின் வித்தகி பத்மசிகாமணி ஞானாப்பிகை அவர்களும், கஞ்சறாவை செல்வன் அபிராம் சகாதேவன் இசைக்க மோரச்சாங்கை திரு. மையூரன் அவர்கள் இசைக்க ஆசிரியை கமலா பத்மநாதன் அவர்கள் நிகழ்வை நெறிப்படுத்த பல நூற்றுக் கணக்கான இசைரசிகர்கள் பார்வையாளராக கலந்து சிறப்பிக்க நீயுமோடன் முருகன் ஆலய பிரதம குரு அவர்கள் ஆசீர்வாதம் வழங்க G.T.V அறிவிப்பாளர் திரு. சஜீதரன் அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க மிகவும் சிறப்புடன் கிட்டத்தட்ட இரவு ஒன்பது மணியளவில் விழா திரு வேலணையூர். பொன்னண்ணா அவர்களின் நன்றியுரையுடன் சிறப்புடன் நிறைவுகண்டது.

- வேலணையூரான்.



தொல்புரம் பொக்கணை பகுதியில் பிடிபட்ட 10தலை நாகம்

## HENDON தமிழ்ப் பாடசாலை

11ம் பக்கம் தொடர்ச்சி

ஆசிரியராக பொறுப்பு சிறிது அதிகமாக இருந்தபோதும், அதனைப் பொருட்படுத்தாது தம் தாய்மொழிக்கும் தாயகத்துக்கும், நம் குழந்தைகட்கும் நம் கடமையைச் செய்ய வேண்டும் என்ற பேரவாவோடு, இப்பாடசாலை ஆசிரியர்கள் பள்ளியின் முன்னேற்றத்திலும், மாணவர் தேர்ச்சியிலும் மிகவும் அர்ப்பணிப்பாக நடப்பதை, உள்ளார்ந்த உவகையோடு உயர்வாகப் பாராட்டிப் பேசினார்கள் நிர்வாகத்தினர். அத்துடன் தம் பாடசாலையின் வெற்றிக்கு முதுகெலும்பாக இருக்கும் ஆசிரியப் பெருமக்கள் தம் பாடசாலைக்குக் கிடைத்த சொத்தென்றும் கூறுகின்றனர்.

**உங்கள் நிர்வாகம், அதன் நிழலில் வாழும் HENDON தமிழ்ப்பாடசாலை, சீரான கொள்கைகள் இவற்றில் காணும் பெருமிதத்திற்கும் அப்பால்... ஏதோ ஒரு நெருடல்...அடிக்கடி சிந்திக்கத் தோன்றும் ஏதோ ஒரு சிறு உறுத்தல்... இக்கேள்விக்குக் கிடைத்தது கீழ்வரும் பதில்.**

"நாம் வாழும் இத்தொகுதியில் மிக அதிக அளவில் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். எந்த வயதைச் சேர்ந்த இளையோரையும் வரவேற்றுத் தமிழறிவு ஊட்டிட எமது ஆசிரியர்கள், நிர்வாகத்தினர் தயாராக உள்ளனர். இலவசமாக... அதே நேரத்தில் திறமை மிக்க ஆசிரியர்களால் மொழிஅறிவு, கலை கலாச்சாரப் பண்பாடு இவையெல்லாம் கூப்பிடு தொலைவில் இருக்க எம் இளையோர் பலர் தமக்கும் தம் தாய் மொழிக்கும் சம்பந்தமே இல்லாதது போல நடந்து கொள்கின்றார்கள். கைக்கெட்டிய தொலைவில் தாய் மொழி வகுப்புகள் நடப்பதை, நம் தமிழ்ப் பெற்றோர்களும் கூடப் . புறக்கணித்து, நம் பிள்ளைகட்கு அந்த ஆர்வத்தைக் கொடுக்காது இருக்கின்றார்கள். இப்பேர்ப் பட்ட பெற்றோர் மனநிலை எப்போது மாறும்? எம் இளையோரில் பலர் தாய்மொழி பற்றி எந்த அக்கறையுமின்றி இருக்கும் இந்த நிலை எப்போது மாறும்?"

நியாயமான நெருடல். தமிழ் மக்கள் வாழும் வெளிநாடுகளில் பரவலாக நிலவும் நெருடல் இது.

தடையின்றித் தலை நிமிர்ந்து தமிழ் மொழி வளர்க்கும் HENDON தமிழ்ப் பாடசாலை- தாய் மொழிக்குச் செய்யும் தலையாய சேவையைப் பாராட்டி - இப்பாடசாலை தொடர்ந்தும் பக்கச் சார்பற்ற, நட்புறவுமிக்க நல்ல தமிழ் இளையோர்களை உருவாக்கும் நல்ல கலைக்கூடமாக விளங்கி வளம் பெற, வாழ்த்தி நிற்கின்றது புலத் தமிழ்ப் பூங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ENGINE TEC MOTORS
SERVICING AND REPAIR ALL MAKES OF CARS



உங்கள் காரிலுள்ள எந்தத் திருத்த வேலைகளையும் பற்றி இனிக் கவலைப்படாதீர்கள்! தொலைபேசியில் அழைத்து வேல்-ராஜன் என்ற இருவரில் ஒருவரிடம் தமிழில் பேசி உங்கள் திருத்த வேலைகளைச் செய்து கொள்ளுங்கள்! உங்கள் கவலை முடிந்தது.

**Ask for Vel OR Rajan**
**020 8640 1230/ 020 8640 8000**
**07860 226476 / 07860 770 945.**
**UNIT : 5, 339 London Road, Mitcham, Surrey CR4 4BE.**

We offer Facilities for:

- Servicing
- Overhauls
- Clutches
- Car Electricals
- Brakes
- Pre MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertake.


# பிரபாகரன் தாயார்
## இனிப் பிள்ளைகளைப் பார்க்கவே முடியாதா?

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகாரனின் தாயார் பார்வதி அம்மாளுக்கு தற்போது 82 வயதாகிறது. பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த ஜனவரி மாதம் அவர் தன் கணவர் வேலுப்பிள்ளையை இழந்தார்.

கணவர், மகன்கள், மகள்கள் யாரும் அருகில் இல்லாத நிலையில் தவித்த அவருக்கு சில மாதங்களுக்கு முன்பு உடல் நலம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதையடுத்து கனடாவில் உள்ள தன் மகள் வினோதினியுடன் சென்று வாழ விரும்பினார். ஆனால் முடியவில்லை.

தமிழ்நாட்டிலும் அவர் சிகிச்சை பெற இயலாத சூழ்நிலை ஏற்பட்டதால் ஈழத்தில் உள்ள தன் சொந்த ஊரான வல்வெட்டித்துறைக்கு திரும்பினார். தற்போது அங்குள்ள அரசு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார். அவர் முன்பு படுத்தபடுக்கையாக இருந்தார்.

சமீப காலமாக எழுந்து உட்கார்ந்து பேசும் அளவுக்கு அவர் உடல்நிலை தேறியுள்ளது.

பார்வதி அம்மாளை அவரது நெருங்கிய உறவினரும், முன்னாள் எம்.பி.யுமான சிவாஜிலிங்கம் அரசு அனுமதி பெற்று பராமரித்து வருகிறார். வல்வெட்டித்துறை அரசு மருத்துவமனையில் அவருக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது என்றாலும் அவரது மனம் மகன்கள், மகள்களை பார்க்க ஏங்குகிறது.

இதை அவர் பல தடவை கண்ணீர் மல்க சிவாஜிலிங்கத்திடம் கூறியுள்ளார். இதையடுத்து பார்வதி அம்மாளின் மகன், மகள்களை பார்க்க ஈழத்துக்கு வரவைக்க சிவாஜிலிங்கம் முயன்றார். ஆனால் அதற்கு வெற்றி கிடைக்கவில்லை.

வேலுப்பிள்ளை-பார்வதி அம்மாள் தம்பதியருக்கு மனோகரன், பிரபாகரன் என்ற 2 மகன்களும், ஜெகதீஸ்வரி, வினோதினி என்ற 2 மகள்களும் உள்ளனர். இவர்களில் 63 வயதாகும் மனோகரன் டென்மார்க் நாட்டில் வசித்து வருகிறார்.

மூத்த மகள் ஜெகதீஸ்வரி தனது கணவர் மதியாபரனுடன் சென்னையில் வசித்து வருகிறார். இளைய மகள் வினோதினி தனது கணவர் ராஜேந்திரனுடன் கனடா நாட்டில் வசித்து வருகிறார்.

ஈழத்துக்கு சென்றால் சிங்கள அரசு கைது செய்து சித்ரவதை செய்யும் என்ற எண்ணத்தில் இவர்கள் செல்லவில்லை.

பார்வதி அம்மாளுக்கும் தனது மகன், மகள்களின் நிலை நன்கு புரிந்துள்ளது. எனவே பேரன், பேத்திகளையாவது பார்த்து விட முடியுமா என்று ஏங்குகிறார். ஆனால் அதற்கும் வாய்ப்பு மிக, மிக குறைவாகவே உள்ளது.

வல்வெட்டித்துறை அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரி மயிலேறும் பெருமாள் கூறுகையில், பார்வதி அம்மாள் நன்கு தேறி வருகிறார். உறவினர்கள் யாரையாவது பார்த்தால் அவருக்கு மகிழ்ச்சி அதிகமாகும். முகம் பிரகாசமாகி விடும் உறவுகளின் பாசத்துக்காக அவர் ஏங்குகிறார் என்றார்.

விடுதலைப்புலிகள் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளதால் சிங்களவர்கள் தற்போது தைரியமாக தமிழர்கள் பகுதிகளுக்கு வந்து சுற்றி பார்க்கிறார்கள். சுற்றுலா வரும் சிங்களவர்கள் வல்வெட்டித்துறையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்று பார்வதி அம்மாளை பார்க்கத் தவறுவதில்லை, வாரத்துக்கு குறைந்தபட்சம் 10 ஆயிரம் பேர் அந்த மருத்துவமனைக்கு வந்து செல்கிறார்கள்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் பார்வதி அம்மாளுக்கு பழங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் கொடுத்து செல்கின்றனர். சிலர் பார்வதி அம்மாள் காலைத் தொட்டு வணங்குகிறார்கள்.

உலகத் தமிழர்களின் அடையாளமாக திகழ்ந்த பிரபாகரனை பெற்ற வீரப்பெண்மணி என்று சிங்களவர்களே பார்வதி அம்மாளை புகழ்ந்து செல்வது குறிப்பிடத்தக்கது.


VIMBAM
VIMBAM - 2010 Jointly Organized by Centre for Community Development
6 வது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா-2010
6th International Tamil Short Film Festival
21-11-2010 ஞாயிறு மாலை 4.30 மணிக்கு
(மண்டப வாயில் 4.00க்கு திறக்கப்படும்)
சரியாக 4.30க்கு முதலாவது படம் திரையிடப்படும்.
Greenwich University Auditorium
DAVID FUSSEY LECTURE THEATRE, AVERY HILL CAMPUS (SOUTHWOOD SITE)
UNIVERSITY OF GREENWICH, AVERY HILL ROAD
ELTHAM, LONDON SE9 2UG
Nearest : Eltham, Falconwood 132, 162, 286

வெற்றி பெற்ற குறுந்திரைப்படங்களுடன்,
தென்னிந்திய - புகழ்பெற்ற இயக்குநர் அம்ஷன்குமாரின்
'ஒருத்தி' திரைப்படமும் விஷேச காட்சியாக
காண்பிக்கப்படும்.



அம்ஷன்குமாரின்
ஒருத்தி
இவள்
ஒருவனைத் தேடும்
ஒருத்தி அல்ல!
தன்
அடையாளத்தை
தேடும்
ஒருத்தி!!

அனுமதி: £5.00

Vimbam: 020 8470 7883, 020 8471 5636, 07736 908 421
vimbam@aol.com
CCD: 020 8546 1560 admin.ccd@sangu.org
DEEPAM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணன் வழியில் ஒரு தங்கை



செல்வி ஆரபி பகீதரனின் வயலின் அரங்கேற்றம் 'ஆகுறொவ்ற்' தியேட்டரில் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 28ம் திகதி நடைபெற்றது. திருவாரூர் கோதண்டபாணி அவர்களிடம் கிங்ஸ்டன் தமிழ்ப் பாடசாலையிலே முதல் அடி எடுத்து வைத்த ஆரபியின் இசைப்பயணம் அன்று இசை உலகப் பிரவேசத்தில் முதல் அடியைப் பதித்தது. அரங்கு நிறைந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு எள்ளளவும் ஆரபி மருண்டதாகத் தெரியவில்லை. லால்குடி ஜயராமன் அவர்களின் பௌதாரி வர்ணத்துடன் கலகலப்பாக ஆரம்பித்த கச்சேரி, ஆபேரியில் நகுமோகு வாசித்ததுடன் இடைவேளையைத் தொட்டது. தமிழ் இசைக்கு, அளப்பரிய அழகிய உருப்படிகளை உருவாக்கியும் மற்றவர்கள் எழுதிய கீர்த்தனைக்கு மெட்டமைத்தும் தந்த தண்டபாணி தேசிகரின் தேவமனோகரி உருப்படியும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 'ஸ்ரீ' ராக எந்தரோ மஹாநுபாவுலு, ஹம்ஸத்வனி ரகுநாயகா ஆகிய உருப்படிகளும் இவை இரண்டுக்கும் இடையில் பிரவாகமாக வயலினில் வந்து தவழ்ந்தன. இடைவேளையின் பின்னரும் அதே சுறுசுறுப்பு, அதே நளினம், அதே சுத்தம். இடைவேளையின் பின்னர் வந்த ராகம், தாளம், பல்லவி சங்கராபரண ராகத்தில். பெரிய சிக்கலான வேலைகள் என்று இல்லாமல் சுதி சுத்தமாக, லயசுத்தமாக, கற்பனாஸ்வரம் வாசித்து முடித்ததைப் பாராட்டலாம்.

திடீரென்று வயலினைக் கீழே வைத்த ஆரபி ராஜாஜி எழுதி பிரபலமான குறையொன்றும் இல்லை. மிஸ்ரகாபியில் ராகவம் என்று இருபாடல்களைப் பாடினார். தொடர்ந்து மீதிக் கச்சேரி முழுவதும் பாடினால் என்ன என்று நினைக்குமளவுக்கு குரல்வளம், சாரீர வளம். கணீரென்று இருந்தது அந்தச் சிறு பொழுது. திருமதி சீதாலட்சுமி ஆரபியின் இசை ஆசிரியை. நன்றாகவே கற்பித்திருந்தார். இனிமை, தெளிவு நிறைந்த சுத்தமான பாட்டு. மதுவந்தி தில்லானாவும் த்விஜாவந்தி திருப்புகழும் அடுத்து வயலினில் வந்து அரங்கேற்றத்தை நிறைவு செய்தன.

நல்ல தரமான வாசிப்பு என்பதால் விரைவாக முடிந்துவிட்டதோ என ஒரு பிரமை. அதற்கு ஏற்றாற்போல பக்கவாத்தியம். பவானி சங்கர், பிரசன்னா தேவராஜா, கந்தையா சிதம்பரநாதன் மூவரும் எவ்வித தடையுமின்றி மெதுவாக பின்னாலே போய்க்கொண்டு இருந்தார்கள். அவர்களின் தனி ஆவர்த்தனமும் ரசிக்கும்படியாக இருந்தது.

எதையுமே ஒப்பிட்டுப் பார்ப்பது மனித இயல்பு. இரு அரங்கேற்றங்களை, அல்லது இரு பிள்ளைகளை, பெண்களாக இருந்தால் இரு புடவைகளை ஒப்பிடுவார்கள். ஆனால் ஒரே வீட்டில் ஒரே பெற்றோரின் பிள்ளைகளை ஒப்பிடுவது தவறு என நினைக்கிறேன். எனவே ஆரபியை அவரின் அண்ணன் அரவிந்தனுடன் இசை விடயத்தில் ஒப்பிடுவதும் தவறு என்றுதான் அரங்கேற்றம் வரை நான் நினைத்திருந்தேன். அண்ணனின் அநுபவம் ஆரபிக்கு வர இன்னும் கொஞ்ச நாளாகும். ஆனால் நிச்சயமாக அண்ணனைப் போலவே தொடர்ந்து இசையில் ஈடுபட்டால் ஆரபிக்கும் நல்ல எதிர்காலம் உண்டு என்று நம்புகிறேன். இடையில் இருவரும் சேர்ந்து வாசித்தபோதும் ஆரபி பாடியபோதும்தான் எனக்கு இந்த எண்ணம் உதித்தது.

பிரதம விருந்தினராய்க் கலந்து கொண்ட திருமதி பு. கலா கோபால் அவர்கள் ஆரபியின் வாசிப்பை, தாளத்திலே தவறாத கற்பனா ஸ்வரக் கோர்வைகளை எல்லாம் பாராட்டிப் பேசினார். மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு பொ. கனகசபாபதி அவர்கள் மேற்கு நாடுகளில் பிள்ளைகள் நம் கலை கலாச்சாரங்களைப் படிப்பதால் வரும் நன்மைகளையும் படிக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் எடுத்துச் சொன்னார்கள்.

# செத்த வாழ்க்கையடா!

● தயா



நான் பிறந்தேன் ஈழமதில்
நன்றாக படித்து விட்டேன்
பல்கலையும் கற்றுவிட்டேன்
இருந்தும் எனக்குள் ஒரு மோகம்
வெளிநாட்டு மாப்பிள்ளையை கரம்
பிடிக்க வேண்டுமென்று
அப்படியே கரம்பிடித்தாயிற்று
நானும் வந்துவிட்டேன் சொர்க்க வாழ்வுக்கு
கரம்பிடிக்க வந்தவரோ சிறுவயதில்
சொர்க்க நாடு வந்து விட்டார்
அவருக்கோ தமிழ் தெரியாது
ஓரளவு தமிழ் பேசிடுவார்
சுளகு என்றால் சிரிக்கிறார்
இட்லி என்றால் சிரிக்கிறார்
சரியான வெய்யில் என்றால்
கனக்க சூரியன் என்கிறார்
கூழ் என்றால் அருவருக்கிறார்
என்னத்தை நான் சொல்ல
இன்னும் ஏராளம் கதையுண்டு
அதை சொன்னால் கருமமடா
என்னருமை பெற்றோரே என்னதான்
உன் பிள்ளை தலைகீழாய்
நின்றாலும் எங்கள் உயிர் மொழியாம்
தமிழினை நன்றாக புகட்டிடுங்கள்

# மனோபாவம் என்னும் ஸ்டியரிங்!

ம.கா.சிவஞானம்

பள்ளி வாசலில் பலூன் விற்றுக் கொண்டிருந்தார் ஒரு வியாபாரி. அவரிடம் சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் என்று விதவிதமான நிறங்களில் பலூன்கள்!

எப்போதெல்லாம் வியாபாரம் டல்லடிக்கிறதோ.. அப்போதெல்லாம் ஹீலியம் காற்று நிரம்பிய பலூன் ஒன்றை உயரே பறக்க விடுவார் வியாபாரி. உயரத்தில் பறக்கும் பலூன், பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்கும். உடனே, பலூன்களை வாங்கத் துடித்து, வியாபாரியை வட்டமிடுவார்கள். பலூன்கள் விற்பனையும் உச்சத்துக்குப் போகும்.

இப்படியே நாள் முழுதும் அவரது வியாபாரம் நடக்கும்.

ஒருநாள், அவர் பலூன் விற்றுக் கொண்டிருந்த போது யாரோ அவர் சட்டையைப் பிடித்து அழைப்பதுபோல் உணர்வு. திரும்பி பார்த்தால், ஒரு சிறுவன். ''அந்த நீல வண்ண பலூன்கூட இப்படி பறக்குமா?'' என்று பரிதாபமாக கேட்டான். அவனுக்கு மிகவும் பிடித்தது நீலநிறம் போல!

சிறுவனுடைய அப்பாவித்தனத்தால் நெகிழ்ந்து போன வியாபாரி, அவனை ஆதரவாக அணைத்தபடி, ''தாராளமாக பறக்கும், தம்பி!'' என்றார். அதோடு, ''தம்பி நீல வண்ண பலூன் என்றில்லை.. எந்த நிற பலூனும் பறக்கும். பலூனை பறக்க வைப்பது நிறங்கள் அல்ல. அதில் உள்ள காற்றுதான்!'' என்று விளக்கினார்.

இதுதான் நம் வாழ்க்கையிலும் நடக்கிறது.

'நம் வாழ்க்கைக்கு இதுதான் முக்கியம்.. நம்மை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வது இவைதான்' என்று எத்தனையோ வெளியுலக காரணங்களுக்குள் நாம் குழம்பிக் கிடக்கிறோம். ஆனால், அவையெல்லாமே காட்சிப் பிழைகளாகத்தான் போகின்றன. உண்மையில் எவர் ஒருவரையும் வாழ்க்கைத் தரத்தின் உச்சத்துக்கே கொண்டு செல்வது அவரருக்குள்ளேயே இருக்கும் ஓர் அற்புதம்தான். அந்த அற்புதத்தின் பெயர் - 'மனோபாவம்'!

'இந்த நூற்றாண்டின் மகத்தான கண்டுபிடிப்பே - மனிதர்கள் தங்கள் மனதையும் மனோபாவத்தையும் மாற்றிக் கொள்வதன்மூலம் தங்களின் வாழ்க்கையையே மாற்றிக் கொள்ளலாம்' என்கிறார் ஒரு பேராசிரியர்.

ஆஹா, எவ்வளவு எளிமையான ஸ்டியரிங்!





# வாசகர் கடிதம்

## உருகுது நெஞ்சம்; பெருகுது கண்ணீர்!

ஏழேழு ஜென்மத்துக்கும் ஒரு தலைவன் இனிப் பிறக்கவே போவதில்லை. கார்த்திகை மாதம் எங்கள் தலைவனின் நினைவால் நெஞ்சு வெடித்துச் சிதறுகிறது. 26ம் திகதி அவன் பிறந்தான். அவனது பிறந்த நாள்தான் தமிழர்களுக்கு மறவாத நாள். எங்களுக்காக அவன் தன் வசந்த காலத்தை எல்லாம் அழித்தான். அவன் எங்கோ ஓரிடத்தில், எங்கள் இனத்துக்காகப் போராடியபோது, தன்மானத்தோடு வாழ்ந்தோம். இன்று ...? உருகுது நெஞ்சம்; பெருகுது கண்ணீர்!

**கனக-சிவப்பிரகாசம், EDGWARE.**

## திருந்தவே மாட்டார்கள்!

தலைப்புப் போடுவதற்கு நீங்கள்தான் ஐயா! முதல்பக்க 'திருந்த மாட்டார்கள்' என்று அடித்திருக்கிறீர்கள். உங்களுக்குக் கைவந்த கலை. சிறுபான்மை என்ற சொல்லை அழிப்பதற்கு மகிந்தா செய்யப் போகிற காரியத்தை அழகாகச் சொல்லியிருக்கிறீர்கள். என்னதான் எழுதினாலும் திருந்தவே மாட்டார்கள் இவர்கள்!

**என்.சர்வானந்தம், KINGSBURY.**

## 'வியாபாரம்' செய்கிற தலைவர்கள்!

தமிழ்நாட்டிலிருந்து வந்த டி.அருள் எழிலன் சொன்னது உண்மைதான்!. தமிழகத்தில் தமிழர்கள் ஈழத்தவர்களுக்காக கண்ணீர் சிந்தியதை நான் அங்கிருந்த சமயத்தில் நேரில் கண்டிருக்கிறேன். ஆனால், ஈழத்துக்காக பேசுகிற தலைவர்கள் என்று ஒருவரைக்கூடக் கண்டுபிடிக்க முடியாது. வாயில் வருவதை எல்லாம் பேசுவார்கள். 'இரத்த ஆறு ஓடும்' என்பார்கள். எல்லாமே வாக்கு வேட்டைக்குத்தான். ஒருவர்கூட உண்மையான தலைவனில்லை- ஈழத்தை வைத்து 'வியாபாரம்' செய்கிறவர்கள்தான் எல்லாரும்!.

**சு.கண்ணன், NORTHOLT.**

## இனி இப்படி வேண்டாம்!

ஈழத் தமிழர்களுக்கு இருக்கிற ஒரே ஒரு அமைப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான்!. அதையும் 'உடைக்கிற' மாதிரிச் செய்திகளை ஏன் வெளியிடுகிறீர்கள்? மகிந்தாவுக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கிற மாதிரி அல்லவா உங்கள் செய்தி இருக்கிறது. இனி இப்படி எல்லாம் வேண்டாம்!.

**எம்.ஜெயச்சந்திரமூர்த்தி, STRETHAM.**

## அடிமைச் 'சுதந்திரம்'!

யாழ்ப்பாணத்திற்குப் போய் வந்தேன். எல்லாரும் மகிழ்ச்சியாக இருப்பது போன்ற ஒரு 'செயற்கை'யான நிலைமைதான்!. சிங்கள அரசுக்கு அடிமையாக இருந்து கொண்டு இருப்பதும் ஒரு வாழ்வா? யாழ். சென்று வந்த ஐரோப்பிய குழு குறிப்பிட்டதுபோல, 'தமிழ் மக்களிடம் மகிழ்ச்சி இல்லை!' என்ற கருத்து உண்மையானதே!

**செ.குமரப்பன், NEWMALDEN.**

## விபரமான தகவல்கள்

ராஜிவ் கொலையைப் பற்றி அறிந்திருக்கிறேன். ஆனால், எப்படியெல்லாம் அந்தக் கொலை நடந்தது என்பதை மிக விபரமாக எழுதி வருகிறார். அடுத்த இதழ் எப்போது வரும் என்று ஆவலைத் தூண்டுகிற வகையில், விஷயங்கள் வருகின்றன.

**- குமார் குமாரசாமி, PERLY.**

'வாசகர் கடிதம்' பகுதிக்குத் தமது கருத்துக்களை எழுதுபவர்கள், பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**Editor, 'Puthinam'**
**38, moffat Road, London, sw17 7EZ.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமெல்லாம் HOMOEO CARE மருத்துவ சேவை

அனைத்து நோய்களுக்கும் பாதுகாப்பான பக்கவிளைவுகளற்ற ஹோமியோபதி மருத்துவ துறைக்குப் பெருமை சேர்ப்பவராகத் திகழும் டாக்டர் ஆர். தியாகராஜன் இப்போது இங்கிலாந்தில் வாழும் பலரது மதிப்பைப் பெற்றுள்ளார். கடந்த 25 ஆண்டுகளாக இந்தியாவில் திருச்சியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் HOMOEO CARE உலகத் தரத்தில் சேவையாற்றி வருகிறது. டாக்டர்.ஆர். தியாகராஜன், டாக்டர். மஞ்சுளா தம்பதியின் ஹோமியோ-கேர் இன்று உலகமெங்கும் நோய்களினால் அவதிப்படும் மக்களைக் குணப்படுத்திக் காத்து, ஆரோக்கியமான வாழ்வை அளித்து வருகிறது.

உலகம் முழுவதும் பரந்து விரிந்து சேவை ஆற்றிவரும் ஹோமியோ-கேர், இலங்கை, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, நோர்வே, இத்தாலி, ஹொலண்ட், சுவிட்சலார்ந்து, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. HOMOEO CARE நிர்வாக இயக்குனர் டாக்டர். ஆர். தியாகராஜன் இங்கிலாந்துக்கு விஜயம் செய்து நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்.

லண்டனில் சிகிச்சை பெறவிரும்புவோர் லண்டன் தொலை பேச இலக்கத்தில் தொடர்பு கொண்டு விபரங்களை - சந்தேகங்களை அறிந்து கொள்ளலாம். இதன் மூலம் இலகுவாக உங்களுக்கான மருத்துவச் சிகிச்சையைப் பெறமுடியும்.

ஹோமியோபதி-கேர் முக்கிய சிறப்பு பிரிவுகள்: 1. அலர்ஜி சிகிச்சை, 2. நீரிழி நோய் சிகிச்சை, 3. கர்ப்பிணிப் பெண்களுக்கான சிகிச்சை.

உலகமெங்கும் உள்ளவர்களுக்காக Distance Treatment என்ற தொலைதூர மருத்துவ சிகிச்சை மையம் என்பதை கடந்த பல ஆண்டுகளாக HOMOEO CARE நடத்தி வருவதே மாபெரும் வெற்றியாகும்.

## உடல்வலிக்கு நிரந்தர நிவாரணம்!

வலி எண்பது இப்போது ஒரு பெரும் பிரச்சனை. முதுகுவலி, தோள்பட்டை வலி, கால் வலி, கை வலி என்று உடம்பு வலிகள் இன்று பலருக்கு. தினசரி மனிதர்களுக்கு ஒவ்வொரு வகையான வலிகள்.

அழற்சிக்கு ஆளாகும் தசைநார்கள்தான் இந்த விதமான வலிகளுக்குக் காரணமாகின்றது. மக்களுக்குத் தூக்கத்தில் ஒரு ஒழுங்குமுறை இருப்பதில்லை. தூக்கத்தையும், உடல் ஓய்வையும் ஏற்படுததம் ஹார்மோன் குறைவது இதற்கு ஒரு காரணம். மாதவிடாய் நிற்கிற காலத்தில் இந்தப் பிரச்சனை அதிகம் வருகிறது. எந்த வித வைத்தியப் பரிசோதனையின் போதும், அனைத்துமே நன்றாகவே இயங்குகின்றன. இவற்றுக்கெல்லாம் ஹோமியோபதி வைத்தியத்தில் மிக நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. உணவு, உடற்பயிற்சி போன்றவற்றுடன், ஹோமியோபதி வைத்தியத்தினால் (பக்க விளைவுகளற்ற) முற்றாக நிவர்த்தி செய்யப்படும்.




ஒரே தலையிடியாக இருக்கிறது என்று சொல்கிறபோது, அவர்கள் படுகிற அவஸ்தையை முகத்தில் பார்த்தே புரிந்து கொள்ளலாம். இந்தத் தலையிடியைப் போன்ற வலி வாழ்க்கையில் எதுவுமே இல்லை!

கண்நோய், வெயிலில் செல்லுதல், இருட்டில் இருத்தல், இரத்த அழுத்தம், பல் சொத்தை, பசி, சைனஸ், கண்நீர் அழுத்தம் போன்றபல காரணங்கள் இதற்குக் காரணம்.

மைக்ரேன் என்ற ஒற்றை மைக்ரேன் தலையிடி இருக்கிறதே, அதைச் சரியானபடி கவனிக்காவிட்டால், வேறு சில பாதிப்புகள் உடலில் ஏற்படும். வாதம், இதயத்தில் பாதிப்பைக் கூட ஏற்படலாம்.

தலையிடி என்றதும் மருந்துக் கடைக்குப் போய் மாத்திரைகளை வாங்கிப் போடுவது நமது பழக்கம். அது தற்காலிமானதே! நிரந்தரமான தீர்வுக்கு ஹோமியோபதி முழுமையான தீர்வை வழங்குகிறது.

# லண்டனிலும் ஹோமியோபதி வைத்திய நிபுணர்
# டாக்டர் ஆர்.தியாகராஜன்

### அனைத்து நோய்களுக்கும் பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side Effects) முழுமையான குணம்

### அறிந்து கொள்வோம் - ஹோமியோபதி சிகிச்சை



## விரைவான பலன் அளிக்கும் ஹோமியோபதி மருத்துவம்!

ஜெர்மன் நாட்டில் தோன்றிய உலகின் மிகப்பெரிய மாற்று மருத்துவம் ஹோமியோபதி. கத்தியின்றி, இரத்தமின்றி அகிம்சை வழியில் நோய்களை குணமாக்கும் சக்தி படைத்தது. இந்த மருத்துவம் நாட்டு மருத்துவம் என்றும், சித்த மருத்துவம் என்றும் தவறான கருத்து மக்களிடம் நிலவி வருகின்றது. ஆனால் இந்த மருத்துவம் முற்றிலும் ஜெர்மனியில், டாக்டர் சாமுவேல் ஹனிமன் என்பரால் கண்டு பிடிக்கப்ட்டது. எந்த வித பக்க விளைவும் ஏற்படாத பாதுகாப்பான பூரா குணம் அளிக்கக்கூடிய மருத்துவம் ஹோமியோபதி. இந்த மருத்துவத்தைக் கண்டு பிடித்த ஹனிமன், ஆங்கில மருதத்துவத்தில் எம்.டி., பட்டம் பெற்றவர். அந்த மருத்துவத்தில் அதிருப்தி ஏற்பட்டு, ஹோமியோபதி சிக்ச்சை முறையே சிறந்தது என்று முடிவு செய்து, தமது சேவையை அர்ப்பணித்தார். இந்த மருத்துவம் மிக மெதுவாகக் குணப்படுத்தும் என்கிறது தவறான கருத்து. சரியான நேரத்தில் சரியான திறமையான மருத்துவரிடம் சிக்ச்சை பெற்றால், மிக விரைவில் குணமாகும் என்பதே உண்மை.

### அலர்ஜி, HAYFEVER

அலர்ஜிகளுக்கு முக்கிய சிகிச்சை அளிக்கிறோம். சம்மர் வருகிறது HAYFEVER என்ற கண்கடி, மூக்குக் கடி, தொண்டைக்கடி, அடுக்கான தும்மல், மூக்கிலும், கண்களிலும் நீர் வடிதல் என்பன உங்களை வாட்டி எடுக்கிறதா? பூக்கள் பூக்கும் காலத்தில் POLLEN என்ற மகரந்தந்தால் ஏற்படும் இந்த நோய்களுக்கு ஹோமியோபதியில் பூரண தீர்வு உண்டு.

## ஹோமியோபதி மருத்துவத்தில் சிறப்பு சிகிச்சை

**சை**னஸ், தலைவலி, மைக்ரேன் தலைவலி, வெண் புள்ளிகள் (**Leucoderma**), மூட்டுவலி (**Arthritis**), மூலநோய் (**Piles**), சிறுநீரக கற்கள், பித்தப்பை கற்கள், வயிற்றுப்புண், சோரியாசிஸ், தோலில் ஏற்படும் அனைத்து வியாதிகள் மற்றும் குழந்தைபேரின்மை (**Sterility**), ஆண்மைக்கு குறைபாடு (**Impotency**), மணவாழ்க்கை குறித்த பயம், நம்பிக்கையின்மை போன்ற நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை உட்பட பல நோய்களுக்கும் சிறப்பு சிகிச்சையளிக்கப்படுகிறது.

ஹோமியோபதி மருத்துவம் பாதுகாப்பானது; நிரந்தர நிவாரணம் அளிக்கக்கூடியது!

**ஹோ**மியோபதி வைத்திய நிபுணர் டாக்டர். ஆர்.தியாகராஜன் அவர்களிடம் உலகெங்கும் பல்வேறு நாடுகளிலிருந்தும் மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். நேரில் சந்தித்து அல்லது தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்டு அவரிடம் மருத்துவ சிகிச்சை பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சிகிச்சை பெற விரும்புவோர், HOMOEO CAREஇன் மின் அஞ்சல் வழியாகவும் சிகிச்சை பெற வாய்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. நேரடியாக வர முடியாதவர்களுக்கு உலகத்தின் எந்தப் பாகத்தில் நீங்கள் வாழ்ந்தாலும் சிகிச்சை முறை மற்றும் மருந்துகள் உடனடியாக தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**லண்டனில் டாக்டர் ஆர்.தியாகராஜன் தொடர்புகளுக்கு: 02081441553, 02087678004, 07833 341 693**

அவுஸ்திரேலியா : 0061 280 114 553, அமெரிக்கா : 0019 095325259, திருச்சி : 0091 431 2432046, 0091 431 2432946, கொழும்பு : 0722934800 077760 2513

E-mail : homoeocare@rediff.com / website : homoeocare.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org